பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 06 வெள்ளிக்கிழமை (18.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 144

# வன்னிப் பகுதி ஆஸ்பத்திரிகளில் சாதாரண மருந்து தானும் இல்லை!

## அவை பெரும் நெருக்கடிக்குள் என்கிறது ஐ.சி.ஆர்.சி.

கொழும்பு,ஏப்ரல்18

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் - வன்னிப் பிரதேசத்தில் - உள்ள ஆஸ்பத்திரிகளில் பரசெற்றமோல், அன்ரி பயற்றிக்ஸ், தடுப்பூசி மருந்துகள் ஆகிய சாதாரண அடிப்படை மருந்துகள் கூட இல்லாத பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகளுக்கு சுகாதார அமைச்சு ஒழுங்காக போதிய மருந்து வகைகளை அனுப்பிவைக்காமையினாலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு (ஐ.சி.ஆர்.சி.) நேற்று விடுத்த தனது பிந்திய அறிக்கையில் வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகள் மற்றும் வைத்தியநிலையங்கள் எதிர்நோக்கும் சவால்களை வெளிப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த கஷ்ட நிலை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின் பிந்திய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நாளந்த செயற்பாடுகளை மேற்கொள்ளவும் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்கும் வைத்தியசாலைகளில் பெரும் ஆளணித் தட்டுப்பாடு நிலவுகிறது.

சர்வதேச மனிதநேய சட்டத்தின் படி ஆயுத மோதல் நிலைமைகளில் நோய்வாய்பட்ட, காயமடைந்த பொதுமக்கள் மற்றும் போரில் ஈடுபடுவோருக்குத் தேவையான சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்படவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விசேட தாக்குதல் அணிகள் கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும்

கொழும்பு, ஏப்.18

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூன்று தாக்குதல் அணிகள் கொழும்பிலும் தெற்கிலும் ஊடுருவி உள்ளதாக வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்தை எச்சரித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் சிறப்பு பயிற்சி பெற்ற எண்பது போராளிகள் மூன்று தளபதிகளின் கீழ் தெற்கில் ஊடுருவியிருப்பதாகவும் இவர்கள் முக்கிய இலக்குகள் மீது சமகாலத்தில் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரியில் பெரும் மருந்து தட்டுப்பாடு; கொழும்பில் இருந்து இங்கு வந்து சேர்வதில் தாமதம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரண்டாவது காலாண்டுக்குத் தேவையான மருந்து வகைகள் இதுவரை வந்து சேராமையால் பெரும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மருந்துத் தட்டுப்பாடு காரணமாகப் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் பெரும் திரமங்களை எதிர்கொள்வதுடன் அதிக பணத்தைச் செலுத்தி தனியார் மருந்தகங்களில் மருந்துகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சில முக்கிய மருந்துகள் இல்லை என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. இதன் அடையாளமாக மருந்து எழுதும் கொப்பிகளில் 'O/S' (கையிருப்பு இல்லை) என்ற அடையாளம் இடப்பட்டு அவற்றை வெளியில் தனியார் மருந்தகங்களில் வாங்குமாறு நோயாளிகள் கேட்கப்பட்டனர். இது குறித்து நோயாள ர்கள் பலரும் உதயனிடம் விசனம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக போதனா வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டபோதே மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை ஊர்ஜிதமாகியது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று விமானத் தாக்குதல்! மாணவி பலி!!

### குடியிருப்புகள் பலவும் நாசம்

கொழும்பு, ஏப். 18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியில் உள்ள புன்னை நீராவியடிப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இலங்கை விமானப்படையினரின் எவ் - 7 ரக விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார் என்றும் மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் குடியிருப்புகள் பல முற்றாக



அழிக்கப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் அன்சலஸ்தியன் டிலக்ஷனா (வயது - 15) என்பவரே உயிரிழந்த மாணவி ஆவார். ஜெராட் என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

உயிரிழந்த மாணவியின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரேத

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச நாம் தயாராகவே உள்ளோம்; இன்னும் நோர்வேயுடன் தொடர்பு கொள்ளவில்லை

### மடுமாதா சொருபத்தை அகற்றியது அரசைச் சிக்கலில் மாட்டவே



கொழும்பு,ஏப்.18

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க தயாராகவே இருக்கின்றோம். ஆனால் இன்னமும் நோர்வே அனுசரணை யாளர்களுடன் உத்தியோகபூர்வ தொடர்பு எதனையும் அரசு ஏற்படுத்தவில்லை.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாராகவே இருக்கின்றது. அவர்கள் பங்கரவாதர நடவடிக்கைகளை கைவிட்டு பேச்சுக்கு வரவேண்டும்.

அவர்கள் பயங்கரவாதத்தைக் கைவிட்டால் பேச்சுக்கான கதவு திறந்தேயிருக்கும்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன நோர்வேயில் அமைச்சர் சொல்ஹெய்முடனும் ஏனைய அரச தரப்பினருடனும் நடத்தும் பேச்சுக்கள் தனிப்பட்ட ரீதியானவை. அரசாங்கம் இதுவரை நோர்வேயுடன் எந்தவிதமான உத்தியோகபூர்வ தொடர்பையும் இதுவரை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாதா சொருபத்தை மடுவில் அமர வைக்க உதவுமாறு புலிகளிடம் குருமார் கோரிக்கை

### அரசியல் பொறுப்பாளர் நடேசனைச் சந்தித்தனர்

கிளிநெச்சி,ஏப்.18

மடுத்தேவாலயத்தைச் சுற்றிவரவுள்ள பிரதேசத்தை சமாதான - அமைதி - வலயமாகப் பிரகடனம் செய்து மாதாவின் சொருபத்தை மீண்டும் மடுவில் அமர வைக்க உதவுமாறு விடுதலைப் புலிகளிடம் கோரப்பட்டுள்ளது.

மன்னார் மறை மாவட்ட குருமார் அடங்கிய குழு ஒன்று நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனைச் சந்தித்தது. அப்போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டு நிலைமை குறித்து நடே சனுடன் ஆ ாய்ந்த குருமார் குழுவினர் மடுவை அமைதி வலயமாக்கவேண்டு ் என்று கேட்டு அப்பிரதேச மக்கள் கை யொப்பம் இட்ட மகஜரையும் அவரிடம் கைய ளித்தனர்.

உயர் மட்டத்துடன் ஆராய்ந் து ஆக்கபூர்வமான பதிலைத் தருவதாக நடே சன் குருமார் குழுவிடம் உறுதி வழங்கினா ். (அ-1)

## யாழ்.நகரில் நேற்று சில நிமிட நேர இடைவெளியில் இருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்ப்பாணம் கலட்டி மற்றும் குருநகர் பகுதிகளில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் இருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை சுமார் 10.30 மணியளவில் இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ்.கலட்டியில், நரிக்குண்டுக் குளத்துக்கு சமீபமாக உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் இருந்த ஒருவர் அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளினால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உசனில் ஷெல்கள் வீழ்ந்தன; காயமுற்ற பெண் ஆஸ்பத்திரியில்

### வீடுகளும் சேதமுற்றதாக படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

தென்மராட்சி, உசன் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

உசன், மிருசுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் குசினியில் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்தது. அதனால் திருமதி விநாயகமூர்த்தி இராஜேஸ்வரி (வயது - 44) என்பவர் காயம் அடைந்தார்.

கொடிகாமம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட இவர் ( மேலதிக

(12ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்றல் - சென்.ஜோன்ஸ் மோதலின் சில கட்டங்கள்

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டம்

# சென்.ஜோன்ஸ் 64 ஓட்டங்களுடன் சுருண்டது; சென்றல் 5 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்கள்

★ நவநீத் 71 ஓட்டங்களை விளாசினார்

★ ஹரிவதனன், நவநீத் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 102 ஆவது துடுப்பாட்டம் நேற்று அமைதியான முறையில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் 34 ஆவது ஓவரில் 64 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சென்றல் ஆட்டநேர முடிவில் 56ஆவது ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான ஆட்டத்தில் பூவா, தலையா போட்டதில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்து சென்ஜோன்ஸ் கல்லூரியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

சென்.ஜேன்ஸ் கல்லூரி அணிசார்பில் துடுப்பெடுத்தாடிய ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஜெயந்தன் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். ஹரிவதனன் 13 ஓட்டங்ளை பெற்றுக் கொண்டார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய மூவர் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் இருவர் ஓர் ஒட்டத்துடனும் ஒருவர் 02 ஓட்டத்துடனும் ஒருவர் 03 ஓட்டத்துடனும் இருவர் 04 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தார்கள். உதிரி ஓட்டங்களாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டன.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் நவநீத் 10 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் கோபிகன் 10.1 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவருடன் 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் செல்ரன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 56 ஓவர்களில் 5விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களை பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவு பெற்றது.

நவநீத் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். நிர்மல்காந் 38, ஜேம்ஸ் ஜான்சன் 38, செல்ரன் 32 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஹரிவதனன் 17 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 57 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுள்ளளையும் ஹரிபிரவீன் 8 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி சார்பில் களத்தில் இன்று போட்டி ஆரம்பமாகியதும் நவநீத், டயான் துடுபட்டத்தில் ஈடுபடவுள்ளார்கள்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(1-86)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்.கோட்டை ஸ்ரீ பாலஞானவைரவர் தேவஸ்தான கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 13.04.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

முதலாம் பரிசு - ச.அபிநயா - 20/11, வைரவர் கோயில் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

2ஆம் பரிசு - சி.சந்திரன் - 09, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு - தி.உதயகுமார் - சாந்தை, சில்லாலை, பண்டத்தரிப்பு.

ஆறுதல் பரிசில் பெற்றோர்

1) ரகு தையலகம் - பள்ளிவாசல் வீதி, யாழ்.
2) ரவி - Gas Company , யாழ்.
3) வி.ராஜினி - 50/40, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
4) மயூரன் - கற்குளம், கொட்டடி.
5) லக்சன் வீடியோ நிலையம் - 256, கன்னாதிட்டி வீதி, யாழ்.

(a) நிர்வாகம்.

## உள்ளூராட்சி ஊழியர் இணைப்புக்காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.மாவட்ட உள்ளூரட்சி சபைகளில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் உத்தியோகத்தர், ஊழியர்கள் ஆகியோரின் இணைப்புக் காலம் மேலும் 3 மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி வரை தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

(1-207)

## பத்திமா தேவாலயத்தில் புதன் இரவு திருட்டு

வலி தென் மேற்கு,ஏப்18

பண்டத்தரிப்பு புனித பத்திமா தேவாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருட்டு நடைபெற்றுள்ளது.

தேவாலயக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒலி பெருக்கி மற்றும் பெறுமதிமிக்க சாதனங்களை திருடிச் சென்றுள்ளனர். அத்துடன் ஆலய உண்டியலை உடைத்து அதிலிருந்த பெருந்தொகைப் பணமும் இவர்களால் சூறையாடப்பட்டது.

(அ-2-135)

## திருத்தி வாசிக்கவும்

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கேதீஸ்வரன்(தேவன்) அமெரிக்காவில் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (18.04.2008) அமெரிக்காவில் தகனம் செய்யப்படும்.

நேற்றைய உதயன் 10ஆம் பக்கத்தில் வெளியான அவரது மரண அறிவித்தலில் 18.04.2008 வியாழக்கிழமை தகனம் செய்யப்படும் என்று பிரசுரமானது தவறாகும். அதனைத் திருத்தி வாசிக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவியுமான

திருவாட்டி

### குயினி அரியமலர் தேவராஜா



அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது பாடசாலைச் சமூகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஆளணியினர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.

(b)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான திரு.சு.கணேசபிள்ளை அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

### அன்னம்மா சுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியரும்
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

(73283)

## காசநோய்த் தடுப்பு: ஒலிப்பேழை வெளியீடு இன்று பண்ணை ஆலயத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.18

காசநோயைத் தடுக்கும் வழிமுறைகளைச் சித்திரிக்கும் பரதநாட்டிய ஒலிப்பேழை வெளியீட்டு விழா இன்று நண்பகல் 12.15 மணிக்கு பண்ணை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகள் பரதநாட்டிய நிகழ்ச்சியை ஒலிப்பேழை வடிவில் வழங்கியுள்ளனர் (அ-1)

## நாளை விரிவுரைத் தொடர்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் கருத்தரங்கில் பொது மருத்துவ வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா 'சிறுநீரக நோயில் இருந்து எம்மைப் பாதுகாத்தல் எப்படி' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (203)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சிவநேசன்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கனகசபை அவனியுவைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை சிவநேசன் நேற்று (17.04.2008) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - பவானி தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியராசா(லண்டன்), சறோஜினி, பத்மநாதன் (ஜேர்மனி), சாந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் நவனகுமார், வசந்தாதேவி(லண்டன்), விஜயமேகலா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திவ்யா, துவாரகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந், மிதுஷா, ஆரபி, ஆரதி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.04.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c) தகவல்: தாய்,சகோதரி

### நாகலிங்கம் ஏகாம்பரம்

காரைநகர், களபூமி, பொன்னாவளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஏகாம்பரம் (15.04.2008) செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், மகேந்திரன் (ஜேர்மனி), தவேந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (ஜேர்மனி), ஜெகதாம்பிகை (ஆசிரியர், யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), லலிதாம்பிகை (வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி, சுகிர்தா, கீதா, அருள்செல்வம் (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்), கஜானந்தன் (போதனாசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கணேசப்பெருமாள், காலஞ்சென்ற செல்லத்துரை, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கணேசபிள்ளை, அன்னலட்சுமி, வாலாம்பிகை, செல்வநாயகி, காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி, அன்னம்மாவின் சகலனும், தர்சிகா, யதுர்சன், கிசாந்தினி, கஜன், சோபிதன், தட்சாயினி, கார்த்திக், நர்மலா, செந்தூரன், சானுகா, ஜனார்த்தனன், தீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.04.2008) சனிக்கிழமை மு.ப. 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை, களபூமி, காரைநகர். (d) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் தலைவர் கண்தானம்

சங்கானை,ஏப்.18

சங்கானையைச் சேர்ந்த ஒருவர் தனது கண்கள் இரண்டையும் தானம் செய்துள்ளார்.

அண்மையில் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற ஓராண்டு நிறைவு விழாவில் வைத்து தேவாலய வீதி, சங்கானையைச் சேர்ந்த கந்தையா அருள்லிங்கமே தனது கண்களைத் தானம் செய்வதாகத் தெரிவித்தார்.

தான் இறந்தவுடன் தனது கண்கள் இரண்டையும் அகற்றி கண் பார்வையற்றவர்களுக்குப் பொருத்த இவர் சம்மதம் தெரிவித்தார்

53 வயது நிரம்பிய இவர் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் ஆவார். (202-29)

## செயலமர்வு

வேலணை,ஏப்.18

'நிகொட்' செயற்திட்டத்தின்கீழ் தீவகக் கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆரம்பப் பிரிவில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான 10 நாள் அடிப்படைப் பயிற்சி வழங்கல் ஆரம்பச் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களையும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (202)

## பாலர் கல்வி நிலைய கட்டடம் இன்று திறப்பு

மந்திகை,ஏப்.18

பருத்தித்துறைப் பிரதேச சபைப் பகுதியில் உள்ள திருநாவலூரில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் சிறுவர் பாதுகாப்பு நிலையத்தால் நிர்மாணிக்கப்பட்ட நாவலர் இலவச பாலர் கல்வி நிலையக் கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

முடிக் கொற்றாவத்தை விநாயகராலய முன்றிலில் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலர் கல்வி நிலையத்தின் திறப்பு விழா சமூக சேவையாளர் ரீ.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாலர் கல்வி நிலையத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார். (202-218)

## அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் 2 வருடங்களின் பின் சொந்த இடத்தில்

வேலணை,ஏப்.18

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் தனது சொந்த இடத்தில் 2 வருடங்களின் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் இயங்கவுள்ளது.

அல்லைப்பிட்டியிலிருந்து 2006 மே 20ஆம் திகதி மக்கள் அச்சத்தினால் இடம்பெயர்ந்து யாழ்.நகரிலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் முதற்கட்டமாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் 13 குடும்பங்கள் மீளக்குடியேறின.

இதையடுத்து இடம்பெயர்ந்து இயங்கி வந்த மேற்படி பாடசாலையும் யாழ்.அரச அதிபர், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரின் முயற்சியினால் மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (202-267)

## வட்டுக்கோட்டை சுகாதார நிலையத்தின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.18

உலக வங்கியின் சுகாதார சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கென கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மூளாய் வீதி, வட்டுக் கோட்டையில் நடைபெறவுள்ளது. வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலைய அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (202)

### வடலியடைப்புப் பிரதேசத்தில்

## பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட கோதுமைப் பயிர் மழையால் அழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடலியடைப்புப் பகுதியில் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட கோதுமைப் பயிர் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக அழிவடைந்து காணப்படுகின்றது.

பத்துப் பரப்புக் காணியில் உற்பத்தி செய்யப்பட்ட இக்கோதுமைப் பயிர் மிகவும் நன்றாக வளர்ச்சிபெற்று வந்ததுடன் நோய்த்தாக்கங்கள் எவையும் இன்றி வளர்ந்து வந்தன.

கோதுமைப் பயிரில் கோதுமை மணிகள் நன்கு வெளித்தள்ளியிருந்த நிலையில் தொடர்மழை பெய்து அதிகளவு நீர் வயலில் தேங்கியமையால் பயிர் அழிந்துள்ளதுடன் கதிரில் இருந்து வெளிவந்துள்ள மணியும் கூட உரிய பால்பிடிப்பு இன்றிக் காணப்படுகின்றது.

கோதுமைப் பயிர் மணி தள்ளியவேளையில் மழை பெய்தமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கோதுமையைக் கொண்டு வந்த விதைத்தவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை- குடாநாட்டில கோதுமைச் செய்கை இடம்பெறாமையாலும் இப்பயிர் பற்றிய போதிய அறிவைக்கொண்ட அலுவலர்கள் இன்மையாலும் மேலதிக விவரங்களைப் பெறமுடியாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. (202-68)

## கற்கைநெறி தொடக்க விழா

யாழ்ப்பாணம், ஏப்.18

ஐஐஎஸ் சிற்றி கம்பஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தும் 'டிப்ளோமா இன் கொன்ரெம்றறி பிஸ்னஸ் மனேஜ்மென்ற்' (Diploma in Contemporary Bussiness Management) கற்கை நெறியின் தொடக்க விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கை நெறிகள் பீடாதிபதி கே.தேவராஜா கலந்துகொள்வார்.

ஆர்வமுள்ளவர்கள் இந்நிகழ்வில் கலந்கொண்டு கற்கைநெறி தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நோயாளியால் தவறவிடப்பட்ட பொதி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப்.18

கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் விமானம் மூலம் யாழ்.வந்த நோயாளி ஒருவரால் தவறவிடப்பட்ட பொதி ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தவறவிடப்பட்ட அப்பொதியை உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் உதயனுக்குத் தெரிவித்தார். (202)

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.18

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினர் நடத்தும் சிறப்புச் சொற் பொழிவு புன்னாலைக்கட்டுவன் நரசிங்க வைரவ ஆலய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (202)

* * *

சங்கானை, ஏப்.18

சங்கானை அரசடி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழாவும், மஹா சங்காபிஷேகமும் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (202-29)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.18

கெருடாவில் கோடைச் சீமா முத்துமாரி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெற்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பூங்காவனத்துடன் திருவிழா நிறைவுபெறும். (202)

* * *

வலி.தென்மேற்கு, ஏப்.18

பிரான்பற்று ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் சித்திரைப் பூரணை தினத்தன்று உற்சவம் முடிவடையும் என்று தெரிவிக்கப் பட்டது. (202-135)

* * *

வலி.வடக்கு,ஏப்.18

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை உமாபதி சிவாச்சாரியார் குருபூசை இடம்பெறவுள்ளது. (202-86)

* * *

வடமராட்சி வடக்கு, ஏப்.18

கரவெட்டி கலிகைக் கந்தன் ஆலயத் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. சித்திரைப் பூரணை தினமான நாளை மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வைரவர் மடையும் இடம்பெறவுள்ளன.

இந்த ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (202-218)

# மாணவர்கள் சூரியனைப் போன்று வளர்ந்து பிரகாசிக்க வேண்டும்

### 'அருணலு' பரிசளிப்பின்போது கொமர்ஷல் வங்கியின் கிளைமுகாமையாளர்

நல்லூர்,ஏப்.18

காலையில் உதயமாகும் சூரியன் மேலே எழுந்து வரும்போது அதன் பிரகாசம் மேலும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதேபோன்று சிறுவர்களும் தமது கல்வியில் மென்மேலும் உயர்ந்து பிரகாசிக்கவேண்டும். இதையே 'அருணலு' என்ற சிங்களச் சொல்லின் அர்த்தம் குறிக்கின்றது. சிறார்கள் கல்வியில் இதுபோன்று உயர்ந்து வளர வேண்டும் என்பதிலேயே கொமர்ஷல் வங்கி சிறுவர்களுக்கென 'அருணலு' என்ற பெயரில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கியது.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கியின் கிளை முகாமையாளர் ஏ.குபேரகுலேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

கொமர்ஷல் வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் பாடசாலை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெறும்போது மிகவும் கூடுதலான பரிசுத் தொகையை பெற்றுக்கொள்வது எமது வங்கியில் மட்டுமே. மாவட்டத்தில் முதல் பரிசாக எதிர்காலத்தில் 50 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையை சிறுவர்கள் பெறக் கூடியதான கொமர்ஷல் வங்கி வழங்கவுள்ளது. இங்கே கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் கல்வியில் மேம்பட்டு விளங்க வேண்டும் என்பதாலேயே அவர்களுக்கென அதிகரித்த பரிசுத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் கொமர்ஷல் வங்கியில் சிறுவர்களுக்கான 'அருணலு' சேமிப் புக் கணக்கை ஆரம்பிப்பதன் ஊடாக அவர்களின் எதிர் காலத்திற்கு ஒளியூட்ட வேண்டும் என்றார்.



பாடசாலை மட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சிறுவர்களுக்கு முறையே ரூபா 10 ஆயிரம், ரூபா 7500, ரூபா 5000 பணப்பரிசு வழங்கப்படுவதாகவும் குபேரகுலேந்திரன் தெரிவித்தார்.

இம்முறை பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஐந்து மாண்வர்களுக்குப் பரிசில்கள் வழங்கப் பட்டன. (ப-111)




கொமர்ஷல் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையின் 'அருணலு' பரிசில் திட்டத்தின்கீழ் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிளைமுகாமையாளர் ஏ.குபேரகுலேந்திரன், வங்கி உத்தியோகத்தர் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதை முதலிரு படங்களிலும் காணலாம். பரிசில் பெற்ற மாணவர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் பெற்றோர்களுடன் நிற்பதை அடுத்த படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் நிதியை விரயம் செய்யாது இன்றைய வேலையை இன்றே செய்யுங்கள்

## புதுவருட வைபவத்தில் பிரதமர் தெரிவிப்பு

''நாம் அனைவரும் பொதுமக்களின் ஊழியர்களே. நாம் அனைவரும் பொதுமக்களிடமிருந்து சம்பளம் பெற்றுக்கொள்வதால் பொதுமக்களுக்குச் சேவையாற்றுகையில் செயற்றிறமையாக விளங்குதல் வேண்டும். இன்றைய வேலையை இன்றே செய்யுங்கள். நாளைக்குப் பிற்போட வேண்டாம். பொதுமக்களின் நிதியை விரயம் செய்யவேண்டாம்.''

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

சிங்களப் புதுவருடத்தையொட்டி பிரதமர் அலுவலகத்தில் கடமைகளை ஆரம்பித்து வைக்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''மக்களுக்குள்ள பல்வேறு பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டே அவர்கள் பல எதிர்பார்ப்புகளுடன் அலுவலகங்களுக்கு வருகை தருகின்றனர். அவர்கள் தொடர்பாக நாங்கள் நன்கு கவனம் செலுத்தவேண்டும். சம்பந்தப்பட்ட பிணக்குகளைத் தீர்த்துவைக்க வேண்டும். அதற்காக ஒருசில சட்டதிட்டங்களுக்கு அடிமையாகக் கூடாது. சட்டத்தைக் கடைப்பிடித்துச் செயற்பட வேண்டிய முறையிருப்பினும் தங்களால் மேற்கொள்ளப்படவேண்டிய கடமைகளை மேற்கொள்வதற்கு வழிசெய்து கொள்ள வேண்டும்.'' - என்றார். (சி)

## சாவகச்சேரி, கெருடாவிலில் கசிப்புக் குகை சிக்கியது

யாழ்ப்பாணம், ஏப்.18

சாவகச்சேரி, கெருடாவில் கொட்டாம்பிட்டியில் இயங்கிவந்த சட்டவிரோத கசிப்புக்குகை மதுவரி திணைக்களத் தினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் கடந்த 11 ஆம்திகதி இப் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் உற்பத்திப்பொருள்களை கைவிட்டு தப்பியோடினர். அங்கிருந்து கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா மற்றும் கசிப்பு ஆகியவை பெருமளவில் கைப்பற்றப் பட்டதுடன் கசிப்புஉற்பத்தி சாதனங்களையும் மீட்டனர்.

இதேவேளை, சவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் நடத்திய சோதனையில் கசிப்புவிற்பனையில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


## வாருங்கள் உங்கள் தேவையை பூர்த்தி செய்யுங்கள்

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய எமது வாடிக்கையாளப் பெருமக்களுக்கு G.S.லிங்க நாதன் அன் கோ ஸ்தாபனத்தினர் மனமகிழ்ந்த சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறார்கள்.

**புதிய ரகங்கள் தாமதமாக வந்துள்ளதால் எல்லாத் தெரிவுகளும் நிறைய உண்டு என்பதை சந்தோசத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

திருமணப்பட்டுப் புடைவைகள் புதிய ரகங்கள், பட்டுவேட்டி சால்வை, சூட்டிங் சேட்டிங் நஷனல் குருத்தாசெட் (ஆண்கள் சர்வாணி) என அனைத்து தெரிவுகளையும் சிறந்தமுறையில் தெரிவுசெய்ய நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

## ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ

இல. 13, 14, பெரியகடை வீதி, 47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

- பல விதமான சாரிஸ் வகைகள், சாரி பிளவுஸ், பிளவுஸ் பீஸ் நல்ல ரகங்கள், சுடிதார், சோளிகிட் வகைகள்
- ஸ்கேட் பிளவுஸ் கவுண் ஏனைய ரகங்கள் டெனிம் பினபோம், டெனிம் ஸ்கேட்
- சிறுவர் சிறுமியருக்கான அனைத்து றெடிமேட் ஆடைகளும் சிறுவர்களுக்கான சூட், டெனிம் சூட், டெனிம் ரவுசர்
- ஆடவருக்கான சேட்வகைகள், டெனிம் ரவுசர்கள், ஏனைய ரவுசர் வகைகளும்

*விசேடமாக,*

| | | |
|---|---|---|
| லோங்சிலிவ், சோட் சிலிவ் சேட்ஸ் | ~~1375~~ | 700 |
| போய்ஸ் சேட்ஸ் லோங், சோட்சிலிவ் (பிளேன்&ஸ்ரெப்ஸ்) | ~~700~~ | 400 |
| பிறிண்ரட் சேட் லோங்சிலிவ் | ~~900~~ | 500 |

**பென்சி ரகங்கள் :** றோல்கோட் நகைகள் (ஏனைய அனைத்து பென்சி ரகங்களும்) சூட்கேஸ் கான்ட்பேக், ரவலிங்பேக் மற்றும் கிறீம், கொலோன் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் சிறந்த முறையில் தெரிவுசெய்ய குறைந்த விலையில் தரமான தெரிவுகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ**

இல. 13, 14, பெரியகடை வீதி, இல. 47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



## கியூடெக் கரித்தாஸ் யாழ்ப்பாணம்

HUDEC — யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்தி நிறுவனம் — CARITAS

### பருத்தித்துறை சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டடப் பொருள்களுக்குரிய

### கூறுவிலை கோரல்

*கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறு விலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.*

*இவ் வழங்கல்களுக்காக கூறுவிலை கோரும் விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 29.04.2008 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக இயக்குநர், கரித்தாஸ் – கியூடெக், யாழ்ப்பாணம் என பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்கவும். இக்கூறுவிலை விண்ணப்பங்கள் யாவும் 29.04.2008 அன்று முற்பகல் 10.30 இற்கு தங்கள் முன்னிலையில் திறக்கப்படும்.*

*கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டடப் பொருள்கள் வழங்கலுக்கான கூறு விலை' என எழுதப்பட்டிருக்கவேண்டும்.*

| பொருள்களின் விவரம் | தொகை |
|---|---|
| சுவர் தீராந்தி 4''X 3'' | 24000 (அடி) |
| மூலக்கை வளை 5 3/4''X4 1/2 ''X20' | 800 (தனி) |
| கை மரம் 5''X 4''X14 1/2' (பாவித்ததும், புதியதும்) | 6800 (தனி) |
| சிலாகை 2''X1'' | 210000 (அடி) |

**இயக்குநர், கரிதாஸ் - கியூடெக்**
**14, மத்தியூஸ் வீதி, தியோகு தெரு, யாழ்ப்பாணம்**


## உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி

இடம்பெயர்ந்து உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள வறுமைக் கோட்டிற் குக் கீழ் வாழ்பவர்களுக்கு அகதிகளுக்கானஐ.நா. தூதரக யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் உலர் உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாராந்தம் ஒரு நாளில் குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு என ஒதுக்கி இப் பொருள்களை பிரதேச செயலக வளாகத்தில் வைத்து வழங்கி வருகின்றார்கள்.

இதில் 2006.08.11 திகதிக்கு முன்னர் இடம் பெயர்ந்து உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் உள்ளவர்களுக்கு பாய்கள், சவர்க்காரம், படுக்கை விரிப்பு, நுளம்பு வலை போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன. பகுதி பகுதியாக கிராம அலுவலர் கள் மூலம் ஏற்கனவே அவர்கள் வழங்கிய பட்டியலின் அடிப்படையில் இப் பொருள்கள் வழங்கப் படுகின்றன. (202)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் 134, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் நேற்று (17.04.2008) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.சுப்பிரமணியம் அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகளும் குமாரசாமி (ஓய்வுபெற்ற உப அதிபர், விக்ரோறியா கல்லூரி), இராஜலட்சுமி (கனடா), சண்முகரத்தினம் (முன்னாள் அறிவிப்பாளர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்), சந்தானகோபாலன் (கனடா), பங்கஜவல்லி (கொழும்பு), கணேசபிள்ளை (இலங்கை வங்கி 2ஆம் கிளை) ஆகியோரின் அருமைத் தாயும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற விஜயசூரியர் மற்றும் இராமேஸ்வரி, செந்தாமரை, கனகலிங்கம், திலகவதி ஆகியோரின் அன்பு மாமியும் உமையாள், மீரா, பரணன், ஜனனி, விஜயலட்சுமி, கஸ்தூரி, காயத்திரி, அரவிந்தன், கபிலன், நங்கை, வாசன், சாரங்கன், பிரசன்னா, சுதர்சன் ஆகியோரின் அருமை போத்தியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, தி.ச.வரதராசன் (வரதர்), தங்கச்சியம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*134, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.*

தகவல்: சு.குமாரசாமி, சு.கணேசபிள்ளை (பிள்ளைகள்)

(73279)

### ஞானமுத்து அந்தோனி பறுனாந்து (காணிக்கை)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வேலணையை வதிவிடமாகவும் கொண்ட ஞானமுத்து அந்தோனி பறுனாந்து (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகனும் புலோமினம்மாவின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.04.2008) சனிக்கிழமை மு.ப 10மணிக்கு சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் மண்டைதீவு பேதுரு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு.*

(73277)

தகவல்: மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## Co-op City க்கான பொருள்கள் விநியோகம்

*யாழ்.மாவட்டக் கூட்டுறவாளர்களே,*

யாழ்.மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளCo-op Cityக்கான பின்வரும் அனைத்து பொருள்களையும் நியாயமான விலையில் விநியோகம் செய்வதற்கு ' அன்னை நாகா பூட் சிற்றி' தயாராக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### பொருள்களின் விவரம்

| | |
|---|---|
| 01. நவதானிய வகைகள் | 02. அழகுசாதனப் பொருள்கள் |
| 03.றெடிமேட் ஆடை வகைகள் | 04. விளையாட்டுப் பொருள்கள் |
| 05.குழந்தைகளிற்கான பொருள்கள் | 06. அலுமினியப் பொருள்கள் |
| 07. எவர் சில்வர் பாத்திரங்கள் | 08. வாசனைத் திரவியங்கள் |
| 09.பழரசங்கள், சோஸ் வகைகள் | 10. குளிர்பானங்கள் |
| 11. ஐஸ் கிறீம் வகைகள் | 12. கிளீனிங் பொருள்கள் |
| 13.பாய், தும்புத்தடி, துடைப்பான் | 14. பான்சி (Fancy) பொருள்கள் |
| 15.பொதி செய்யப்பட்ட பொருள்கள் | |
| 16. பதப்படுத்தப்பட்ட பொருள்கள் | |
| 17.அதிகுளிரூட்டிய பொருள்கள் | |
| 18. விலை பெருக்கும் இயந்திரங்கள் | |
| 19.எலக்ரோனிக் தராசுகள் | |
| 20. மற்றும் இதர பொருள்கள் | |
| 21.விலை நிர்ணய இயந்திரம் (பிறைஸ் கோட் மிசின்) | |

கூட்டுறவுப் பெருமக்களே! தங்களிற்கு தேவையான மேற்குறித்த பொருள்களினை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணத்தில் தாங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் அன்னை நாகா பூட்சிற்றி ஆகும் என்பதனை கூட்டுறவுப் பெருமக்களிற்கு அறியத்தருகின்றோம்.

எனவே தங்களிற்கு தேவையான பொருள்களிற்கான கேள்வி கோரல்களை உடனடியாகவே சமர்ப்பித்து வேண்டிய பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

**ANNAI NAGAA FOOD CITY**
**175, K.K.S. Road, Jaffna**



### தவறிவிட்டது

காளிகோயிலடி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த ரவிக்குமார் கிருஷாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (883633920V) 16.04.2008 புதன் கிழமை அன்று கோண்டாவிலுக்கும், கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும் (73281)

### தவறிவிட்டது

இராசையா சுபாசினி என்பவருடைய தே.அ. அட்டை (778344050V), விசேட அ.அட்டை என்பன 10.04.2008 அன்று யாழ்.நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தயா நகைப் பூங்கா,**
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0775201613* (73280)

### தவறிவிட்டது

மார்க்கண்டு ஜெயசீலன் என்பவருடைய தே.அ. அட்டை (630205166V ஏழாலை வடக்கு, ஏழாலை), சிறிய குறிப்புப்புத்தகம் (Note Book) என்பன மல்லாகம், அளவெட்டி, சங்கானை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

மா.சிவகுமார், ஏழாலை வடக்கு, முனியப்பர் கோயிலடி, மோகன்கடை, அராலி மத்தி, வட்டுக்கோட்டை, ஸ்ரீதுர்க்கா இரும்பகம், சின்னக்கடை, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும்.

**தொ.பே.: 222 8053.** (73275)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் மாணவர்களுக்கிடையில் மாவட்டச் சதுரங்கப்போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. ஆட்டத்தில் விறுவிறுப்பான கட்டங்கள். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மாவட்டச் சம்பியனாகத் தெரிவானது

## *சளைக்காது ஆடின இரு அணிகளும்*

வலி.வடக்கு,ஏப்.18

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் வலைப் பந்தாட்ட அணிகளுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வலைப்பந்தாட்ட அணி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு அணியும் உடுவில் பிரதேச விளையாட்டு அணியும் மோதிக்கொண்டன.

நான்கு கால்பாதி ஆட்டங்களாக ஆடப்பட்ட இப்போட்டியில் முதல் கால் பாதியில் உடுவில் பிரதேச செயலகம் ஆதிக்கம் செலுத்தியது. முதல் கால்பாதி ஆட்டம் நிறைவில் 14:2 என உடுவில் பிரதேச செயலகம் முன்னிலையில் நின்றது.

இரண்டாவது கால்பாதி ஆட்டம் திடீர் திருப்பத்திற்கு உள்ளாகி சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மைதானத்தில் ஆதிக்கத்தைச் செலுத்தி 15:04 என சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் காணப்பட்டது.

மூன்றாவது கால்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மைதானத்தில் சமவலிமையுடன் மோதிக் கொண்டு இருந்தமையால் மிகவும் உற்சாகம் மைதானத்தில் காணப்பட்டது.

உடுவில் பிரதேச செயலகம் 07:05 புள்ளிகள் என்ற வகையில் முடிவடைந்தது. இறுதிக் கால்பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் நெருக்கடியான நிலையிலும் வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இரு அணிகளும் மோதிக்கொண்டன.

இறுதி ஆட்டத்தில் மீண்டும் திடீர் திருப்பத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அணி ஏற்படுத்தி மைதானத்தில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தியமையால் 06:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் போட்டி முடிவடைந்தது.

பார்வையாளர்ளையும் ஆதரவாளர்களையும் மிகவும் உற்சாகப்படுத்திய இப்போட்டி நிறைவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 28:27 புள்ளிகள் என்ற அடிப்ப டையில் உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அணியை வெற்றி கொண்டு யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)

## *இன்றைய ஆட்டங்கள்*

யாழ்ப்பாணம்,ஏப்.18

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்திவரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* காலை 8.30 மணி யங்ஸ்ரார் வி.க. எதிர் திருநெல்வேலி வி.க.
* பிற்பகல் ஒரு மணி யூனியன் வி.க. எதிர் நியூஸ்ரார் வி.க. (203)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஊர்காவற்றுறை அன்ரனீஸ் பூப்பந்தாட்டத்தில் முதலிடம்

வலி.வடக்கு, ஏப்.18

தீவக வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் வேலணை மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

புனித அந்தோனியார் கல்லூரி மிகவும் நிதானமாக விளையாடி வேலணை மத்திய கல்லூரியை வெற்றிகொண்டு தீவக வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அணிகளும் மாவட்ட மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# மானிப்பாய் 'கழுகுகள்' அணியை வெற்றி கொண்டது பரிஷ் அணி

வலி.வடக்கு,ஏப்.18

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் வடமராட்சி கழுகுகள் விளையாட்டுக்கழகமும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக்கழகம் 9 விக்கெட்டுகளை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அருண் 82, நிருஷாந் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

கிசோக்குமார் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சாத்வீகன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் விநோத் 06 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் மற்றும் மயூரன், பாஸ்கரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் 25 ஓவர்களில் 06 விக்கெட்டை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

கிசோக்குமார் 34, ஜெகதீபன் 33, பாஸ்கரன், விநோத், ஜெயராஜ் தலா 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

அசோக் 06 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் நிருஷான், அருண், சுபாநாத் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# விறு விறுப்பாக நடைபெற்ற வலைப்பந்தாட்ட இறுதியாட்டம்

## சண்டிலிப்பாய் இந்து சம்பியனானது

வலி.வடக்கு, ஏப்.18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளுமே இறுதிவரை போராடிக்கொண்டு இருந்தன. இரு கல்லூரி அணிகளையும் ரசிகர்களும் பார்வையாளர்களும் பாராட்டினார்கள்.

போட்டியின் முதல்பாதி ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 19:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி ஒன்றுக்கும் தாமும் சளைத்தவர்கள் அல்ல என்ற அடிப்படையில் விளையாடி 17:11 என்று புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

போட்டி முடிவில் இரு அணிகளும் தலா 30 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட நிலையில் போட்டி நிறைவுபெற்றது. வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்க மேலதிகமாக 5 நிமிடம் வழங்கப்பட்டது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி இந்த மேலதிக நேரத்தில் 04 புள்ளிகளையும் யூனியன் கல்லூரி 01 புள்ளியையும் பெற்றுக்கொண்டன.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 34:31 புள்ளிகள் என்ற அடிப்படையில் யூனியன் கல்லூரியை வெற்றி கொண்டு வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி 34:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றிகொண்டு 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (1-86)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவிகளுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

போட்டியில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளுக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகளுக்குமிடையிலான போட்டிகளையும் உடுவில் பெண்கள் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலய மாணவிகளுக்கிடையிலான போட்டிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 07 . 04 . 1979



அனைவரும் நெகிழ 18 . 04 . 2006

## செல்வன் பாலசுப்பிரமணியம் கண்ணதாசன்
**(கண்ணன்)**

**(ஓட்டோ உரிமையாளர்)**


*ஈராண்டு உனைப் பிரிந்து இன்னும் இரு விழிகள் மூடவில்லை*
*நீ மீண்டும் வரும் வரையில் ஆண்டாண்டாய் தொழுதிடுவோம்.*

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (73161)

**குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

கருவறையில் 05 ✱ 10 ✱ 1947



கல்லறையில் 18 ✱ 04 ✱ 2004

## அமரர் தூசைமுத்து அன்ரனி


ஆண்டுகள் நான்கு சென்றாலும்
அகலவில்லை உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மாண்டவர் மீண்டிட வழி ஏதும் உண்டோ?...
உங்கள் நினைவுகளில் நித்தம் துடிக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

இல.5, இராசாவின்
தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (73136)

**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## சின்னப்பிள்ளை சின்னத்தம்பி

*தோற்றம்* *20.01.1922* — *மறைவு* *19.03.2008*

திருமதி சின்னப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 19.03.2008 அன்று விண்ணக மெய்தினார். எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவையொட்டி நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், உள் நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் துணைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (18.04.2008) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் எமது இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெற்று, அன்றைய தினம் அனனாரது நினைவாக முற்பகல் 11 மணி முதல் பம்பலப்பிட்டி தொடர்மாடி சன சமூக நிலையக் கட்டடத்தில் நடைபெற இருக்கும ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண் ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.** (ஏ/552447)

**சி.பரமநாதன்,**
நாதன் களஞ்சியம்,
யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 739836

# ஓராண்டு நினைவஞ்சலி

**மண் மகிழ 22.12.1939**

**மனம் நெகிழ 29.04.2007**



## அமரர் ஆசை சோதிராசா

(பிரபல வர்த்தகர், முன்னாள் சோதி கடை உரிமையாளர்- நிற்சாமம், சங்கானை)

*திதி: திரயோதசி (18.04.2008) வெள்ளிக்கிழமை*

அன்பின் உருவமாக ஆருயிர்த் தெய்வமாக
எல்லோர் வாழ்விற்கும்- சோதியாக
ஒளியூட்டிய எங்கள் சோதியே எம்மை விட்டு நீங்கி
ஒரு வருடம் ஆகியும் நீங்கவில்லை உம் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

தகவல்:

சோதி வாசம், நிற்சாமம்,
சங்கானை. (ஏ/552443)

**குடும்பத்தினர்.**

# அறிவித்தல்

(குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 16ஆம் பிரிவின்படியானது)

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இல.நானாவிதம்/105/08

01. திருமதி வசுந்தரா
சடாட்சரன் கதிர்காமர்,
லக்சுமி வாசா,
நவாலி தெற்கு, மானிப்பாய்.
02. சிவசிதம்பரப்பிள்ளை
சிவசண்முகப்பிள்ளை,
வத்தானை வளவு,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
03. திருமதி கிறேஸ் ரட்ணதேவி
ஜெயரட்ணம்,
சின்னப்பா லேன்,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**வழக்காளிகள்**

**எதிர்**

01. அதி வண. டானியல்
செல்வரத்தினம் தியாகராஜா,
பேராயர் இல்லம், வட்டுக்கோட்டை
*அத்துடன்-*
36-5/2, சின்சபா றோட்,
கொழும்பு-6
02. ஆசீர்வாதம் அருள் யோசப்,
ஆதீனக் காரியாலயம்,
தென்னிந்தியத் திருச்சபை
யாழ். ஆதீனம், வட்டுக்கோட்டை.
03. திருமதி ஷிரானி மில்ஸ்,
அதிபர், மிஷன் இல்லம்,
உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.
04. திரு.C.D.சின்னக்கோன்,
3, E.புளொக்,பம்பலப்பிட்டி
பிளாட்ஸ், கொழும்பு-04.
05. வண. செல்வி டெய்சி ஆசீர்வாதம்,
இல.17, பிரான்சிஸ் றோட்டு,
கொழும்பு-6.
06. வண.G.நடராஜா,
ஆசிரியர் தங்குமிடம்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
07. கலாநிதி செல்வி C.V. செல்லையா,
44/1,E.S. பெர்னாண்டோ-
மாவத்தை, கொழும்பு-6.
08. Dr. V.R.டேவிட்,
மே/பா, திரு.பாலகிருஷ்ணன்,
லோட்டன் றோட், மானிப்பாய்,
09. Dr. திருமதி தயா தியாகராஜா,
பேராயர் இல்லம், வட்டுக்கோட்டை
*அத்துடன்*
36-5/2, சின்சபா றோட்,
கொழும்பு-6.
10. திருமதி E.A.ஜெயராஜன்,
ஆசிரியர் தங்குமிடம்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.
11. வண.ஐ.இராஜ்குமார்,
ஆதீனக்காரியாலயம்,
தென்னிந்தியத் திருச்சபை,
வட்டுக்கோட்டை.

**எதிராளிகள்**

இம்மன்றில் மேற்படி வழக்காளிகளினால், மேலே கூறப்பட்டுள்ள எதிராளிகளுக்கெதிராக, உடுவில் மகளிர் கல்லூரி நிர்வாகம் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டமைக்கு அமைவாக, இவ்வழக்கு இம்மன்றில் கூப்பிடப்பட்டு 1ஆம், 2ஆம், 11ஆம் எதிராளிகளுக்கு எதிராகப் பின்வருமாறு கட்டாணையையும் பிறப்பித்துள்ளது என்பதை அறியத்தருகிறேன். ஆதலால் இதில் அக்கறையுள்ள எவராவது இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் இடைபுகுனராக, நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ இணைந்து கொள்ளலாம் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**மேற்சொல்லப்பட்ட 1ஆம், 2ஆம், 11ஆம் எதிராளிகளுக்கு எதிராக,**

19.03.2008 திகதியன்று இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் வழக்காளிகளின் சட்டத்தரணிகளின் பிரசன்னத்துடன் வந்தபோது, மேற்படி வழக்காளின் பிராது, சத்தியக்கூற்று, ஆவணங்கள் ஆகியவற்றை மன்று நன்கு பரிசீலித்து, இவ்வழக்கானது, இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியின் கல்வி நடவடிக்கை சம்பந்தமான ஒரு பிணக்கு என்பதாலும், மேலும், இக்கல்லூரியிற் பல மாணவிகள் கல்விபயின்று வருவதாலும், மேலும், குறித்த மாணவிகளின் கல்வியானது சீர்குலையக் கூடாது என்பதற்காகவும், மேலும் கல்லூரியில் முன் இருந்த நிலை பேணப்படவேண்டும் என்று, வழக்காளிகள் பிராதிற் கோரியுள்ளமைக்கு அமையவும், வழக்காளிகள் நிவாரணங்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்பதையிட்டு மன்று திருப்தி அடைந்ததன் பெயரில், இவ்வழக்கின் "3ஆம் எதிராளிக்கு எதிராக, 1ஆம், 2ஆம், 11ஆம் எதிராளிகளும், தென்னிந்தியத்திருச்சபை யாழ். ஆதீன நிருவாக சபையின் ஏனைய உறுப்பினர்களும், எதுவித ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதையும் தடைசெய்து" கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருன்றேன்.

மேலும் இக்கட்டாணையை மீறிச் செயற்படும் பட்சத்தில் நீதிமன்றக் கட்டளையை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார்கள் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளது.


அத்துடன் இக்கட்டாணையானது இன்றிலிருந்து 14 நாள்களுக்கு அமுலில் இருக்கும் என்றும், அத்துடன் இவ்வழக்கு இம்மன்றில் 25.04.2008ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்குக் கூப்பிடப்படும் எனவும் அறியத்தருகின்றேன்.

2008ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11ஆம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ம.செல்வரத்தினம்,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

*மாவட்ட நீதிமன்றம்,*
*மல்லாகம்.* (73197)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்- 19.04.2008



அன்னை மடியில் 21 . 01 . 1957

ஆண்டவன் அடியில் 06 . 03 . 2008

## அமரர் கிட்டினன் சிவநேசன்
## (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்து ஆறுதல் கூறிய உறவினர்கள், நண்பர்கள், அனுதாபிகள் மற்றும் கூட்டுறவாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைத்தொடர்பு சாதனங்களூடாக தொடர்பு கொண்டு எமது துயரத்தில் பங்கேற்றோருக்கும் மற்றும் பத்திரிகைகள் வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (19.04.2008) சனிக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும், ஆத்மசாந்திப் பிரார்தனையிலும் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (73251)

**குடும்பத்தினர்.**

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் 20 ஆவது ஆண்டுவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம் கலந்து கொள்வார்.

(202)

## சத்தகம் வீழ்ந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

தடியுடன் மரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கொக்கைச் சத்தகம் தவறி வீழ்ந்து கீழே அமர்ந்திருந்தவரின் தொடையை வெட்டிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை மந்துவில் மேற்கில் இடம் பெற்றது.


அதே இடத்தைச் சேர்ந்த என்.இராஜசிங்கம் (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார்.

(202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் இம்முறை அமோக நெல் விளைச்சல்: நீண்ட காலத்தின் பின் விவசாயிகளுக்குக் கிடைத்த பலன்

நெடுந்தீவில் இருந்து இனியும் விவசாயம் செய்வதென்பது இயலாத ஒன்று என நினைத்திருந்தவர்களே இப்போது வியக்கிறார்கள். கடந்த இரண்டு காலபோ



கங்களிலும் நெடுந்தீவில் நெற்செய்கை உச்ச பயனைத் தந்ததே காரணம்.

நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் நெற்செய்கையில் நல்ல விளைச்சலைப் பெற்ற வேலாயுதம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இம்முறை பெய்த பெரும் மழை காரணமாக விவசாயிகள் சிலர் நட்டமடைந்தா




லும் பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையில் நல்ல பயனைப் பெற்றுள்ளனர். நீண்டகாலத்தின் பின் நெடுந்தீவின் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை என்கிறார் விவசாயி கனகசூரியர்.

இலங்கையில் செழிப்பாக கோதுமை விளைந்த பிரதேசம் நெடுந்தீவு. எட்வேட் நோளன் காலத்திலும் சரி அதற்குப் பின்னர் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தையடுத்தும் சரி கணிசமான நெல் விளைச்சலில் பண்டைய மக்களின் கடின உழைப்பு இருந்தது. காலப்போக்கில் நன்கு வரண்டு வளம் குறைந்த பூமியாக இந்தத் தீவு மாற விவசாயமும் அருகிப்போனது.

அருகிப்போன விவசாயம் தற்சமயம் மீண்டும் புத்துயிர் பெறுவதுபோல் தெரிகின்றது. நீண்ட இடைவெளிக்குப் பின் சில இளசுகளிடையே நெற்செய்கையில் ஆர்வம் காணப்படுகின்றது. நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த இளைஞர் நல்லதம்பி புவனேஸ்வரகுமார் விவசாயம் தனக்கு நன்கு பிடித்தமான தொழில் என்கிறார்.

நெழுவினி பகுதியில் நெற்செய்கையை மேற்கொண்ட இவர் ஏக்கருக்கு 35 மூடை நெல் விளைந்ததாகக் கூறினார். திருநெல்வேலி விவசாயத் திணைக்களமும் வேலணை கமநல சேவைகள் நிலையமும் இங்கு நெல் உற்பத்தியில் அக்கறை செலுத்தியதாகவும் விவசாயிகளுக்கு மானிய உதவிகளை வழங்கியதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இளைஞர் புவனேஸ்வரகுமார் உள்ளூரில் கிடைக்கக்கூடிய பசளைகளை தான் பயன்படுத்தியதாகவும் இரசாயன உரங்கள் எதனையும் விசிறவில்லையெனவும் இயற்கை உரங்களை உபயோகித்து இயற்கையுடன் ஒன்றிணைந்து விவசாயம் செய்வதே தனது குறிக்கோள் என ஆணித்தரமாகக் கூறும் இவர், நெற்செய்கையை அடுத்து எள் விதைத்துள்ளதுடன் வீட்டின் ஒரு பகுதியில் வாழைச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளார். இப்பயிர்களும் நன்கு செழித்து நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அனைத்துமே செழித்து வளர இயற்கை உள்ளீடுகளே கைகொடுக்கின்றன. விடாமுயற்சியும் கடின உழைப்பும் இருந்தால் நெடுந்தீவு மக்கள் தமக்குத் தேவையான அளவுக்கு நெல் உற்பத்தியில் வெற்றி பெறமுடியும் என்பது அவரது கருத்தாகும்.

விவசாயத் திணைக்களம் விவசாயி ஒருவருக்கு தலா 3 புசல்கள் வீதம் 24 பேருக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3½ மாத நெல் இனங்களை வழங்கியுள்ளது. 'பி.டபிள்யூ 316', 'ஏ.ரி.353' ரக இனங்களுடன் ஒரு ஹெக்ரெயர் பரப்புக்கு 'எச் 4' ரக விதை நெல்லும் வழங்கியதுடன் மானிய உதவிகளும் வழங்கியிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் ஓர் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 70 புசல் வரை எனக் கூறும் விவசாய பிரதிப்பணிப்பாளர் சிவகுமார் 35 புசல் நெடுந்தீவைப் பொறுத்தளவில் உச்ச விளைச்சல் எனக் கூறினார். இங்கு நெல் விளைச்சலுக்காக தற்சமயம் பயன்படுத்தப்பட்டது 25 ஏக்கர் வரையான நிலம் மட்டுமே. மேற்குப் பகுதியில் 8 முதல் 9 வரையானதும் கிழக்கில் 13 முதல் 14 வரையான நிலம் பயன்படுத்தப்பட்டதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

நெழுவினி, நெய்க்குளம் பகுதிகள் தவிர்ந்த சிறுகரை, எருவிலி, வெல்லைப்

## ஏக்கருக்கு 35 மூடைகள் வரை நெற்செய்கை பலனளித்துள்ளது

பகுதிகளிலும் சிறந்த விளைச்சலைப் பெற முடியும். கடந்த காலங்களில் இப்பகுதிகளில் நெல் அமோக விளைச்சலைக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. சிறுகரை, எருவிலிக்குளம் கணக்கன் தறைப் பகுதிகளில் இம்முறை நெற்செய்கை இடம்பெற்றிருப்பின் மிகவும் கூடுதல் விளைச்சல் கிடைத்திருக்கும் எனப் பலர் கூறினார்கள். நெல் விதைக்கப்பட்ட இடங்களில் கால்நடைகளின் தாக்கம், நோய்களின் தாக்கம் இருக்கவில்லை என்பதிலும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி இருந்தபோதும் மழையின் தாக்கம் சிலரைப் பாதித்தது குறித்தும் ஏனைய விவசாயிகளும் கவலையடையாமலில்லை.


தனது நெற்பயிர்களுக்கு மத்தியில் விவசாயி ஒருவர்.

சேதமுற்ற நெற்செய்கையாளர்களின் விவரம் திரட்டப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் உரிய நட்ட ஈடு கிடைக்கலாம் எனவும் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்கள் குறித்துக் கேட்டபோது தெரிவித்தார் நெடுந்தீவு உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன்.

நெல் உற்பத்தியில் நெடுந்தீவுக்குக் கிடைத்த உச்ச விளைச்சல் அதில் அக்கறை செலுத்தாத பலருக்கு கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்றைய நிலையில் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கவில்லை என்பதால் தாங்கள் நெற்செய்கையில் ஈடுபடவில்லை எனவும் விவசாயம் என்பது எண்ணாமல் செய்யும் ஒன்று. இனிவரும் நாள்களில் நெற்செய்கையில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் சிலர் தமது கவலையை வெளியிட்டனர்.

விவசாயத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் சிவகுமார், வேலணை கமநல சேவைகள் நிலையத்தின் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் பத்மநாதன் ஆகியோர் நெடுந்தீவின் நெல் உற்பத்தியில் அக்கறை கொண்டு அவ்வப்போது அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கியதாகவும் அதிகரித்த விளைவுக்கு அவர்களும் முக்கிய காரணம் என்பதும் விவசாயிகளின் உள்ளக் கிடக்கை.

தற்சமயம் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள இளைய மற்றும் மூத்த விவசாயிகளுடன் மேலும் பல அனுபவம் மிக்க விவசாயிகளும் இளைஞர்களும் இணைந்து கொண்டால் விவசாயத்துறையில் உரிய இடம் நெடுந்தீவுக்கு கிடைக்கும் என்பது நிச்சயம்.

நம்பி

# டாக்டராக வேண்டும் என்பதில் சிறுவயது முதல் ஆர்வம் கொண்டுள்ள இராமநாதன் கல்லூரி மாணவி

## அவருக்கு சாதாரண தரப் பரீட்சையில் 10'ஏ' சித்திகள்



யாழ்ப்பாணம்,ஏப்.18

சிறுவயதில் இருந்தே ஒரு டாக்டராக வரவேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்துள்ளது. அதற்கு ஊக்கமளிக்கும் வித்தில் இந்தப் பெறுபேறுகளும் அமைந்துள்ளமை மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 10'ஏ' பெறுபேறு பெற்ற மாணவி செல்வி சிவானந்தசோதி நிருபா இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

கல்லூரியில் அதிபரும் ஆசிரியர்களும் அக்கறையும் கவனமும் எடுத்துக் கற்பித்து வழிகாட்டினார்கள். தனியார் கல்வி நிலையத்திற்கும் சென்று படித்தேன்.

பெற்றோர்கள் நான் படிக்கவேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் எனது தேவைகளைக் கவனித்துக்கொண்டார்கள். அனைவரது முழுமையான ஒத்துழைப்பே என்னை இந்தப் பெறுபேற்றை அடைய வழிகாட்டியுள்ளது.

தரம் ஒன்றில் இருந்து நான் இராமநாதன் கல்லூரியில் தான் கற்று வந்துள்ளேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தி அடைந்துள்ளேன் என்ற அவர் உயிரியல் துறையிலும் இப்பாடசாலையிலேயே தொடர்ந்து படிக்கவிருப்பதாகக் கூறினார்.

கல்லூரியின் பிறச் செயற்பாடுகளான ஆங்கில தினப் போட்டிகள், நடனப் போட்டியிலும் மாகாண மட்டம்வரை சென்று பரிசில்களைப் பெற்றுள்ள இவர் பொதுஅறிவுப் போட்டிகள், விஞ்ஞானப் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசில்களையும் பெற்றுள்ளார்.

கல்லூரி சாரணியச் சேவையிலும் இடம்பெற்று சிறந்த சாரணியாகவும் இவர் இருந்து வருகிறார். (86)

# 'உவமையில்லாக் கலை ஞானம்' நூல் அரங்கேற்ற விழா நாளை

யாழ்ப்பாணம், ஏப்.18

சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு எழுதிய 'உவமையில்லாக் கலை ஞானம்' என்னும் நூலின் அரங்கேற்ற விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடும் தொடர்ந்து ஆதீனகுரு முதல்வர் சிலைக்கு மாலை சூட்டுதல், திருமுறை குருதோத்திரம், வேத பாராயணம் ஓதுதல் என்பன இடம்பெறும்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக [illegible] கிருஷ்ணஐயர் நிகழ்த்துவார். (202)

# மேன்மை அடைவோம்

*மனிதன் உலகில் தோன்றிய காலம்தொட்டு அவனது பிரச்சினைகள் ஒரே தன்மையுடையதாகவே இருக்கின்றன. காலமும் சூழ்நிலையும் மாறியதே தவிர, பிரச்சினைகளின் தன்மை யாவும் ஒன்றே. மனிதன் இவ்வுலகில் இன்பம் அடையவே பாடுபடுகிறான். துன்பம் எத்தன்மையாய் இருந்தாலும் அதை அறவே வெறுக்கிறான்.*

*இன்பம் அடையவேண்டுமென்று எண்ணுவது மனிதனது பிறப்புரிமை. இவ்வுடலில் இருக்கும் ஆத்மாவின் தன்மையை மூன்றாகப் பிரிக்கலாம். ஆத்மா என்றும் உள்ளது. அறிவு மயமானது. பேரானந்தத்தை இயற்கையாக நாடும் தன்மையுடையது.*

*இப்படி ஆத்மாவின் தன்மை இருக்கையில், மனிதன் உடலில் கட்டுண்கின்றான். உடலோடு பிணைக்கப்படும் பாசமானது நாளுக்கு நாள், பல பிறவிகள் தோறும், இறுக்கப்பட்டு, முறுக்கேறி, ஈற்றில் ஒரு வேறான மனிதன் ஆகின்றான்.*

*உலகில் இருக்கும் தற்கால புறசூழலும் அவனுக்குப் பாதகமாகவே அமைகின்றன. முன்பு இருந்த மனிதனுக்கு ஆத்மீக நாட்டமும் பெருமளவில் இருந்தது. புறச்சூழலும் அமைதியாகவே இருந்தது. ஆகவே வெகுவிரைவில் முன்னேற்றம் அடைந்து வீடு பேற்றை அடைந்தான்.*

*தற்கால மனிதனுக்கு வீடு பேற்றைப் பற்றி அறிய அவகாசம் இல்லை. சாஸ்திரங்களில் பெரு அளவில் நம்பிக்கை இல்லை. ஆக அவன் செய்யும் ஒரு நல்ல செயல் சிறிய அளவில் அவன் ஆற்றும் ஆலய வழிபாடு. இவ்வாலய வழிபாடும் கூட பொருள் உணர்ந்துசெய்வான் ஆனால் அவனுக்கு சாந்தியுண்டாகும். இவ்வாலய வழிபாடும் ஆங்கிலத்தில் சொல்வார்கள் (Automatic Mechanical) ஆக அமைந்துவிட்டது.*

*அருணகிரிநாதர் ''சரணகமலாயத்தை அரை நிமிஷம் நேரமட்டில்'' என்றார். இன்று உலகில் தியானத்தின் பெயரால் பல இயக்கங்கள் ஆரம்பித்து மனிதனை குழப்புகின்றன. இவை யாவும் மனிதனை தாக்கி அவன் சின்னாபின்னம் அடைந்துவிடுவான் என்பதை எத்தனையோ ஆயிரம் வருடங்கள் வாழ்ந்த அருணகிரிநாதர் [illegible] தவமுறை தியானம் செய்ய [illegible] மிகச் சொற்ப நேரம் போதும் என்றார்.*

*தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் மிகவும் அண்மையில் வாழ்ந்தவர். இவர் ஒரு சந்தர்ப்பத்தில் ஜபம் பல ஆயிரம் தடவை செய்வதிலும் பார்க்க ஸ்திரமான உள்ளத்துடன் ஆண்ட[illegible]ர் நாமத்தை ஒரு தரம் சொன்னாலும் அவன் நற்கதியடைவான் என்பது உறுதி என்றார்.*

*மனிதன் பேரின்பம் அடைய பல வழிகள் உண்டு. தியானம், ஜபம், சேவை, பஜனை ஆகியவையாம். சேவையின் மகத்துவத்தை பாரத நாட்டில் அள்ளி இறைத்தவர்களில் சுவாமி விவேகானந்தர் முதன்மை பெறுகிறார். இவர் அமெரிக்க நாட்டில் பல இயக்கங்கள் செயற்படுவதை பார்த்தார். இந்தியாவில் ஒரு பேரியக்கத்தை ஸ்தாபித்து அதன் மூலம் மக்களுக்குச் சேவை செய்வதை தனது முழுநேர பணி*




*யாக்கினார். சேவை மூலம் இறைவனை அடையலாம். சேவை மூலம் பேரின்பம் கிட்டும். சேவைமூலம் சிவனை ஆராதிக்கலாம் என்ற கருத்துகள் சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.*

*இன்றைய நவீன நாளில் ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை மூலம் இறைதரிசனம், சாந்தி கிடைக்கும் என்ற ஸ்ரீ சைதன்ய மகாபிரபு, மீரா போன்றவர்கள் காட்டிய மார்க்கத்துக்கு ஒரு மிகச் சிறந்த முறையில் மெருகு ஊட்டியுள்ளார்.*

*''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்ற தாயுமானவர் வாக்கு அமைய எல்லா முனிவர்களும் நாம் இன்புற்று இருக்க வழி காட்டினார்கள். ஆகவே நாம் அதன்படி மனதார ஒழுகி மேன்மை அடைவோமாக.*

*''அனுதினம் சாதனை செய்யச்செய்ய ஆனந்தமான மோட்ச நிலையை அடை[illegible]லாம். இதில் ஓர் ஐயமில்லை''.*

நன்றி: ஆத்மஜோதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரண)தரப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த எமது விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்களான

1. அமரகுலசிங்கம் அருண்ராஜ்
2. சர்வேஸ்வரன் அனுசன்
3. ஆனந்தசிவம் சோபன்ராஜ்
4. வரதராஜா தனகோபி
5. பவானந்தன் தர்சன்

ஆகியோரைப் பாராட்டி மேலும் பல சித்திகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

**IUS விளையாட்டுக் கழகம், இணுவில் கிழக்கு.**

(சி/552455)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 * 03 * 1927



மறைவு 19 * 03 * 2008

**அமரர் செல்லர் பூரணம்**

அன்பின் பிறப்பிடமே! பண்பின் இலக்கணமே!
பாசத்தின் அம்மாவே! எமது குலவிளக்கே!
எமை வாழ வைத்த எம் தெய்வமே!
எம் மூச்சு உள்ள வரை
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

132, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. (73273)

தகவல்: **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 12 1963



மறைவு 31 03 2007

**அமரர் நாகராஜா பாக்கியராஜா**

அன்பின் பிறப்பிடமே பண்பின் இலக்கணமே!
பாசத்தின் அற்புதமே எம் குலக்கோயிலே- ஐயா
எம்மை வாழ வைத்த ஒளிவிளக்கே
எங்கே உங்கள் சிரித்த முகம்- உன் பிஞ்சுக் குழந்தைகள்
அப்பா, அப்பா என்று கதறும் குரல்- உமக்கு
கேட்கவில்லையா ஐயா
காலன் அவன் உம்மை எங்கு பிரித்துச் சென்று விட்டான்
ஓராண்டு போனாலும் எம் மூச்சுள்ளவரை
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்- ஐயா!

7ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
தற்போது: சிவலிங்கப் புளியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்: **மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

(73271)

## ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக 31 . 03 . 1974



சருகாக 18 . 04 . 2006

**அமரர் கந்தசாமி கௌரிபாலன்**

**(யாழ்.மாநகர சபை ஊழியர்)**

*கனவின் மீதிகளை செப்பனிடுகிறது வாழ்க்கை*
*ஈராண்டின் பின்னும் நனைகிறது விழிகள்*
*நேற்று நீ எம்முடன்- உறவாய்*
*இன்று நீ நினைவுகளுடன்- படமாய்*
*நாளையும் எம் உள்ளத்தில்- உயிராய்*
*இதயக் கோயிலில் வீற்றிருப்பாய்- அப்பா*
*உன் நினைவை, கனவைச் சுமந்து கண்ணீர்*
*பனிக்கத் துதிக்கின்றோம்.*
*சாந்தி.....! சாந்தி.....!! சாந்தி.....!!!*

அரசடி ஒழுங்கை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**மனைவி, பிள்ளைகள்.**

(73265)

## வீதி சேதம்

நவாலி,ஏப்.18

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியிலிருந்து அதிகார் செல்லமுத்து வீதியூடாக வேலக்கைப் பிள்ளையார் வீதியை சென்றடையும் பிரதான வீதி நீண்ட காலமாக திருத்தி அமைக்கப்படாததினால் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இதனால் வாகனங்கள் உட்பட பொது மக்கள் அனைவரும் பெரும்கஷ்டத்தை அனுபவித்து வருவதாகதெரிவிக்கின்றனர். (202-100)

## குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்பட்ட வைக்கோல் குவியலில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை நுணாவி லில் இடம்பெற்றது.

பெட்டியில் ஏற்றப்பட்ட வைக்கோலினை கயிற்றினால் கட்டியவேளையில் கைதவறி வீழ்ந் ததாகத் தெரிவிக் கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த ந.குண சேக ரம் (வயது 45) என்பவரே காயமடைந்தவர வார்.

## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அப்புத்துரை இராசரத்தினம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.443462406V கொண்டதும் விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்திற்கும் நீர்வேலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அ.இராசரத்தினம், காமாட்சி அம்பாள் கோயிலடி, நீர்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (73268)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கல்லை வேம்படி, சுழிபுரம் தவமணிதேவி தங்கவேலு என்பவருடைய அ.அ.(இல.486980397V), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், சிவஞானம் சிவகலா என்பவருடைய அ.அட்டையும் (இல. 656321920V) கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

**வாணி ரெக்ஸ்**

*பெரிய கடை, யாழ்ப்பாணம்.* (சி/552460)

## கண்ணீர் அஞ்சலி

பிரம்மஸ்ரீ **இரத்தினசபாபதிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்**

(பிரதமகுரு, அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயம்)

எமது அமைப்பின் முன்னாள் உயர்மட்டச் செயற்பாட்டுக்குழு உறுப்பினரான அமரர் சுப்பிரமணியக் குருக்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்', ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

(73270)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பழமுதிர்ச்சோலை ஐஸ்கிறீம் ஹவுஸ் உரிமையாளரும் எமது பேரனுமாகிய **ப.இந்திரநாதன் (ரவி)** அவர்களின் பாசமிகு தாய்

**பத்மநாதன் சரஸ்வதி**

லண்டனில் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கனகரட்ணம் பாக்கியம் குடும்பம், நேசரட்ணம் குடும்பம், நிரோஸ் குணக் குடும்பம்,**

628, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(73266)

## 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி இ.கோகுலராணி**

அராலி தெற்கில் வசிக்கும் **நாகலிங்கம் - இரத்தினம்** தம்பதியரின் செல்வப் புதல்வி

**செல்வி கோகுலராணி**

தனது 50 ஆவது பிறந்த நாளை இன்று (18.04.2008) வெள்ளிக்கிழமை ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள், பத்திரகாளி அம்மன் துணைகொண்டு தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பிமார்களான லண்டனில் வசிக்கும் விஜயராசா குடும்பம், நாகராசா குடும்பம், அராலியில் வசிக்கும் பத்மராசா குடும்பம், தங்கை அன்னலிங்கம் - தவகுலராணி குடும்பம் மற்றும் மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், மாமாமார், மாமிமார், பெறாமக்கள், சித்திமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**குடும்பத்தினர்.**

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

(சி/552461)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அலுவலக உதவியாளர் **கி.பத்மகாந்தன்** அவர்களின் தாய்

திருமதி **பாக்கியம் கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.**

(சி/552463)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**நாகலிங்கம் தர்மகுலசிங்கம்**

**(குணம்- வர்த்தகர்)**



மலர்வு: 13.06.1959

உதிர்வு: 29.04.2007

ஆண்டொன்று என்ன? அறுபதுதான் சென்றாலும்
ஆற்றிட முடியுமா எம் துயரை! சித்தம் கலங்கி
இரத்தம் உறைந்தாலும் கண்முன்னே நிற்கின்றீர்
கதறுகின்றோம் பாதும் புரியாமலே!

ஆத்மா சாந்தியடைய அரியங்காட்டு விநாயகன் தாள் பணிகின்றோம்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம். (73255)

**குடும்பத்தினர்.**

## 31ஆவது நினைவு நாள் அழைப்பு

பிறப்பு 30 * 03 * 1948



இறப்பு 19 * 03 * 2008

**றிச்சேட் பாலேந்திரா வில்சன்**

**(பாலா)**

எமது குடும்பத் தலைவரின் 31ஆம் நாள் நினைவு வழிபாடு இன்று (18.04.2008) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தூய யோவான் ஆலயத்தில் நடைபெறும், அத்துடன் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*18, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.* (73267)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களின் அபிலாஷைகளுக்கு எதிரான சிங்களத் தேசியவாதம்

மனித வாழ்வுப் போக்கை வரலாற்றுப் புறநிலையில் ஆராய்பவர்கள் மானுடம் பிரக்ஞையுற்று, விழிப்பு நிலை கொண்டு, சுயவுணர்வு பெற்று, தளைகளை அகற்றி, கட்டுக்களை நீக்கி, விடுதலை பெற முனைவதையே தனது வாழ்க்கைப் போராட்ட இலட்சியமாகவும், இலக்காகவும் வரித்துக்கொண்டு அசைவதை அவதானிப்பர்.

ஆதி நாகரிகங்களில் - ஆட்சி முறைகளில் - அனைத்து அதிகாரமும் கொண்ட அரசனே சுதந்திர புருஷனாக விளங்கினான். மற்றெல்லோரும் அவனுக்குக்கீழ் அடிமைகளாக உழன்றனர்.

காலப்போக்கில் புதிய நாடுகள், புதிய பண்பாட்டு உலகங்கள் தோன்றின. விடுதலையின் விழிப்புணர்வு மனிதனிடையே பற்றிப்பிடித்துப் படர்ந்து விஸ்வரூபம் எடுத்தது.

காலத்துக்குக்காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டுக் கோலங்கள் விடுதலையின் விழிப்புணர்வை விரிவுபடுத்தின. சிந்தனையின் - எண்ணப்போக்கின் - வளர்ச்சியால் எழுந்த உந்துதல் காரணமாகப் போர், புரட்சி, கிளர்ச்சி என்று மனிதர்கள் விடுதலை வேண்டி எழுச்சி கொண்டனர். இவ்வாறாக விடுதலையின் தேடுதலாக - தளைகளில் இருந்து விடுபடும் சதாகால முயற்சியாக - மனித வரலாறு நகர்கிறது.

இந்த எழுச்சிகளினால் புதிய உலக ஒழுங்குகள் தோற்றம் பெற்றன. முடியாட்சி முறை மண் கவ்வ குடியாட்சி என்ற பெயரில் புதிய கட்டமைப்புத் தோற்றம் பெற்றது.

அதுவும் கூட ஜனநாயகம், கம்யூனிஸம், சோசலிஸம், முதலாளித்துவம் என்று பல்வேறு புனை பெயர்களில் உருக்கொண்டு சமூகக் கட்டமைப்புகளை வளைத்துப் பிடித்து அவற்றின் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தவறவில்லை.

ஜனநாயகம், மக்களாட்சி, பிரதிநிதித்துவ அரசு என்ற பொய்யான - போலியான - கருத்துருவத் திரைகளுக்குப் பின்னால் நின்றபடி மனிதத்துவத்தை அடிமைப்படுத்தும் அடக்குமுறைத் தொழில்நுட்பம் இன்னும் கூட - இன்றும் கூட - கனகச்சிதமாகக் கட்டவிழ்வதைப் பல நாடுகளில் நாம் காண்கிறோம்.

ஒரு நாகரிகத்தை இன்னொரு நாகரிகமும், ஒரு பண்பாட்டுக் கோலத்தை இன்னொரு பண்பாட்டுக் கட்டமைப்பும், ஒரு மதத்தை இன்னொரு மதமும், ஓர் இனத்தை இன்னொரு இனமும் ஆக்கிரமித்து, மேலாதிக்கம் செலுத்தி, அடக்கி, ஒடுக்கும் மேலாண்மை ஆட்சி முறை உலகின் பல பாகங்களிலும் பெரும் அராஜகமாக இன்று விரிந்து செல்கின்றது.

அதிகாரத்தின் அரூபக் கரங்கள் நலிந்த, வலுவிழந்த மக்கள் கூட்டத்தை, சமூகங்களை, இனங்களை அழித்துச் சின்னாபின்னமாக்கும் பெரு நாசமும் அநியாயமும் இந்த நவீன நாகரிக உலகில் ஒழிந்துவிடவில்லை. இன்னும் தொடர்கதையாக அது நீளுகின்றது. அந்த அராஜகத்தை உலகெங்கும் நாம் காண்கிறோம்.

அடக்குமுறையும், அடக்கு முறைக்கு எதிரான எழுச்சியுமாக நவீன உலகம் ஒரு முரண்பாட்டு நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது. அதன் மற்றொரு படிமத்தை இப்போது இலங்கை கண்டு நிற்கின்றது.

மதம்,மொழி, இனம், பால் நிலைவேறுபாடு காரணமாகப் பாகுபடுத்தலுக்கு உள்ளாக்கப்படாமல் இருப்பதும் -

தன்னுடைய சமூக, இனப் பண்பியல்புகளைக் கட்டிக் காத்து, தனது மத நம்பிக்கையைப் பேணி, கருத்து வெளியிடும்சுதந்திரம் உட்பட அடிப்படை வாழ்வியல் உரிமைகளை அனுபவித்து உணர்வுபூர்வமாக ஒரு மனிதன் வாழ்வதற்கு உரித்துடையவன். இதனை உறுதிப்படுத்துவதே உண்மையான சுதந்திரமும் மானுட விடுதலையுமாகும்.

ஆனால் இந்த உண்மையான சுதந்திரமும், மானுடத்தின் விடுதலையும் ஈழத் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

காலனித்துவ ஆதிக்க சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, பின்னர் இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தினரான சிங்களவர்களிடம் அடிமை சாசனமாக எழுதி ஒப்படைக்கப்பட்ட தனது தேசத்தின் இழந்த இறைமையை - இறையாண்மையை - மீட்டெடுப்பதே தனது உண்மையான சுதந்திரம் என்று உணர்ந்து அதற்காகப் போராடுகின்றது ஈழத் தமிழ் இனம்.

*"தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய தாயகத்தில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாஷை"* - என்று தமிழர் தரப்பின் கருத்து நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

பௌத்த மறுமலர்ச்சியின் வடிவமாக சிங்களத் தேசியவாதப் போக்கு இலங்கையில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது. அந்தத் தேசியவாத கருத்தியல் சிந்தனை இன்று சிங்களத்தின் அரசியலில் வலுமிக்க பெரும் ஆதிக்க சக்தியாக - மேலாண்மைக் கருத்தியலாக - உருவெடுத்திருக்கின்றது.

அது தனது சிங்களத் தேசியத்தை நிலைநிறுத்தி உறுதிப்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியம் மீது காழ்ப்புணர்வு கொண்டு அதை அடக்கி, ஒடுக்குவதே ஒரே மார்க்கம் என்று தனக்குள் தானே சதித்திட்டம் விதித்து காய் நகர்த்துகின்றது. அப்பாதையில் வெறிகொண்டு விரைகின்றது.

தென்னிலங்கையின் அரசியல் தலைமைகளின் தமிழர் விரோதக் காழ்ப்புணர்வு திண்ணியமான சமூக, அரசியல், பொருளாதார ஒடுக்குமுறை வடிவம் எடுத்ததன் பின்னணி இதுதான்.

## யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த விழிப்புக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை

### அதிகாரிகளினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்பைக் கோருகிறார் யாழ்.அரச அதிபர்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.மாவட்டத்தில் தற்போது குற்ற நடவடிக்கைகள் அதிகரித்து மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன..

எனவே அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தலா 10 பேரைக் கொண்ட விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலர்களால் முன்னெடுக்கப்படுகின்றன என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று யாழ்.மாவட்டத்தில் திருட்டுகள், மரவளங்களை அழித்தல், சட்ட பூர்வமற்ற மதுபான உற்பத்தியும் விற்பனையும், அனுமதிக்கப்பட்ட குடத்தனை மணல் திட்டி தவிர்ந்த ஏனைய இடங்களில் இருந்து களவாக மணல் அகழ்தலும் விற்றலும்,

வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து யாழ்.நகரப் பகுதிக்குள் இறைச்சி விற்பனைக்காக சட்டபூர்வமற்ற விதத்தில் கால்நடைகளை வெட்டுதலும், களவாக கடத்துதலும், முறைகேடான விதத்தில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற குற்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை கடுமையாகப் பாதிக் கப்படுகின்றது.

ஆகவே கடுமையாகச் சமுதாயத்தைப் பாதிக்கும் இவ்வாறான குற்றங்களைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் விழிப்புக் குழுக்கள் பெரும் பங்காற்றக் கூடியனவாகும். எனவே சமூகத்தினிடையே சிறந்த கௌரவமுடைய, ஒழுங்கான, சேவை செய்யும் மனப்பாங்குள்ள, பொதுமக்களின் நலனில் அக்கறையுடைய, ஒற்றுமையாக, குழுவாக வேலை செய்யக்கூடிய தலா 10 நபர்களைக் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஒவ்வொரு விரிவுக்கும் தெரிவு செய்து விழிப்புக் குழுக்களை அமைப்பதற்குப் பிரதேச செயலர்களினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

எனவே சமூக நலனில் அக்கறையுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு சிறப்பான முறையில் இயங்கக்கூடிய, மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய விழிப்புக் குழுக்களை அமைப்பதற்குத் தங்களின் பரிபூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு முறைகேடாக மண் கடத்துதல், மரங்கள் கடத்துதல் போன்றன மேற்கொள்ளப்படும் பிரதேசங்களை அடையாளம் கண்டு அவ் விவரங்களை உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு பிரதேச செயலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

அதுமாத்திரமன்றி எவருமே குடத்தனை மணல் திட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் மண்ணை மாத்திரம் உரிய அனுமதிப் பத்திரத்துடன் கொண்டு செல்லலாம் என்பதையும் ஏனைய இடங்களில் இருந்து மணல் அகற்றப்படுவது முற்றுமுழுதாக தடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மாவட்ட செயலகம் திட்டவட்டமாக அறிவிக்கின்றது. அத்துடன் அவ்வாறு கடத்தப்படுகின்ற மணல் அல்லது மரம் சோதனைச் சாவடிகளில் சோதனையின்போது பிடிபடும் வாகனங்களைப் பறிமுதல் செய்யவேண்டிய நிலைமை உருவாகும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

மேலும் மதுவரித் திணைக்களமும் இலங்கை மின்சார சபையும் தத்தமது நிறுவனங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். எனினும் அவற்றைச் செயற்படுவதற்கு கிராம சேவை அலுவலர்கள், பிரதேச செயலர்கள் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

எனவே, யாழ்.மாவட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரியும் எவருக்கும் எதிராக மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளினதும் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பதுடன் மக்கள் அவலங்களைக் குறைப்பதில் அனைவரும் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் தயவுடன் வேண்டுகிறேன் - என்றுள்ளது. (202)

## மாவட்ட விதை நெற்களஞ்சியத்தை அரச அதிபர் இன்று திறந்து வைக்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.18

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திணைக்களத்தினால் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட மாவட்ட விதை நெற்களஞ்சியம் இன்று வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்படுகின்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நெற்களஞ்சியத்தைத் திறந்துவைக்கின்றார்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழாவில் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், விவசாயத் திணைக்களப் பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக 'சோஆ' (ZOA) நிறுவனத் திட்ட முகாமையாளர் ஜே.யூட் வோல்ரனும் கலந்து கொள்கிறார்கள்.

தென்னிலங்கையில் இருந்து விதை நெல்லை எடுத்துவருவதில் எதிர் நோக்கப்படும் சிரமங்களுக்குத் தீர்வு காணும் முகமாக இந்த விதை நெற் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப் பட்ட நல்லின நெல்வகைகள் இந்தக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டுப் பின்னர் அடுத்த போக நெற்செய்கைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன என கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

இதுவரை 40ஆயிரம் கிலோ நெல் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இந்தக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நெற் கொள்வனவுக்கான நிதியை 'சோஆ' நிறுவனம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சித்திரா பௌர்ணமி விழாவும் முதலாம் ஆண்டு விழாவும்

நவாலி, ஏப்.18

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையும் ஆலய அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சித்திராப் பௌர்ணமி கலைவிழாவும் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.லோகேஸ்வரன் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் சி.மகேந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக பேரவை உறுப்பினர் செஞ்சொற் ஆறுதிருமுருகனும் கலந்து கொள்வர்.

(202-100)

### சகல மக்களையும் பாதுகாப்பது அரசின் புனித கடமை

## வன்னியில் இரவு நேரத்தில் குண்டு வீசுவதை உடனடியாகத் தடுத்துநிறுத்த உத்தரவிடுங்கள்

### ஜனாதிபதிக்கு கூட்டணித் தலைவர் அவசரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18

பகலில் விமானத் தாக்குதல் நடக்கும் போதாகிலும் பொது மக்கள் எங்காவது ஓடி மறைந்து உயிர் தப்பிக் கொள்ள முடியும். அதுவே இரவில் நடக்குமானால் அவர்களால் எங்கு ஓடமுடியும்? ஒட்டிசுட்டானில் இரவு நேரத்தில் விமானப் படை விமானங்கள் குண்டு வீசியுள்ளமையை அறிந்து பெரிதும் அதிர்ச்சிக்குள்ளானேன். இந்த செயற்பாடு மேலும் தீவிரமாக்கப்படவிருப்பது பெருங் கவலையையும் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இவ்வாறு இரவில் குண்டு வீசுவதைத் தடுக்கும் படியும் சம்பந்தப்பட்டவர்களக்கு அறிவுறுத்தல் கொடுங்கள். மேலும் பகலில் குண்டு வீசுவதனால் போதுமான அவகாசமும் அறிவித்தல்களும் பொது மக்களுக்கு வழங்கச் சொல்லுங்கள்.

இவ்வாறு கூறும் கடிதம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அவசரமாக அனுப்பிவைத்துள்ளார்.

**பொதுமக்கள் அனைவரையும் காப்பது கடமை**

சகல மக்களதும் உயிர்களைக் காப்பது அரசாங்கத்தின் புனிதமான கடமையாகும். இந்தப் பாதுகாப்பு வன்னி மக்களுக்கு மட்டும் மறுக்கப்படுவது ஏன்? மக்கள் குடியிருப்புக்களுக்கு மேலாக பறக்கும் போது ஜெட் விமானங்கள் எழுப்பும் இரைச்சல் காதுகளை செவிடுபடும் படி செய்துவிடும். மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் பாதுகாப்புத்தேடி ஓடுவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்த போது இந்த அனுபவத்தைப் பெற்றுள்ளேன் என்று கூறியுள்ள ஆனந்தசங்கரி மேலும் தெரிவிக்கையில் வன்னியிலுள்ள மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். இனிமேலும் அங்குள்ள மக்கள் புலிகளின் அட்டகாசங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாது. போர்க்களத்தில் தமது பிள்ளைகளை நூற்றுக் கணக்கில் அவர்களால் இனிமேலும் இழந்துகொண்டிருக்க முடியாது. உயிர் அழிவும் பொருள் அழிவும் செய்யாத நட்பு ரீதியான ராணுவத்தை வரவேற்கவே அவர்கள் விரும்புவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தவிர்ப்பதற்கு உறுதி செய்யுங்கள். தொடர்ந்தும் அதைக் கடைப்பிடியுங்கள். கட்டு நாயக்க விமானத் தளம் மீது புலிகள் விமானத் தாக்குதல் நடத்திய போது கொழும்பிலிருந்து நாம் எப்படித் தவித்தோம் என்பதை மறந்து விட முடியாது. வன்னியிலுள்ள மக்கள் நிரந்தரமாக பயத்திலும் அதிர்ச்சியிலுமே இருக்கிறார்கள். இரவில் குண்டு வீசுவது அவர்களை மேலும் அதிக துன்பத்துக்கே உள்ளாக்கும். எனவே இரவில் விமானக் குண்டு வீச்சை நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்றும் ஆனந்தசங்கரி தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

(ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 07 | 19.04.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: சதுர்த்தசி | பி.ப. 02.34 வரை |
| நட்சத்திரம் : | அத்தம் |
| | பி.ப.01.44 வரை |
| சுபநேரம் : | 03.02 - 04.32 |
| ராகுகாலம் : | 09.02 - 10.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுவேலி இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் இரதோற்சவ விஞ்ஞாபனம்

**நாளை (19.04.2008) சனிக்கிழமை**

காலை 7.30 மணிக்கு 108 கலச சங்காபிசேகம்
காலை 8.00 மணிக்கு மூலஸ்தானப் பூசை
காலை 9.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை
தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை
காலை 10.45 மணிக்கு புதிய அலங்காரத் தேரில்
அம்பாள் வீதி வலம் வருதல் இடம் பெறும்.

உற்சவ பிரதம குரு:
*சிவஸ்ரீ பா. சோமசுந்தரக் குருக்கள்*
*(ஆலயப் பிரதம குரு, பத்தமேனி தீர்த்தாங்குளம் பிள்ளையார் தேவஸ்தானம்)*

*விசேட மங்கள வாத்தியம்:*
குமார் குழுவினர் - *ஆவரங்கால்*
L.S.ஜெகநாதன் குழுவினர் - *உடுப்பிட்டி*

இடைக்காடு,
அச்சுவேலி. ஆலய பரிபாலனசபை

---

கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பு

**DLF** Twenty 20
இந்தியன் பிரிமியர் லீக் தொடர்
18/04/2008 ஆரம்பம்

**DISH TV** மூலம் வித்தியாசமான அனுபவத்தை பெறுங்கள்
மிகக் குறைந்த விலையில் **DISH TV Decorder** கள் கிடைக்கும்.
**DISH TV** இற்குரிய கட்டணங்களை உடன் செலுத்தி ஒரு மணி நேரத்தினுள் Activation செய்து தரப்படும்.



மேலதிக விவரங்களுக்கு: SATS-TECH ENGINEER'S.
இல.182, கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேச் அருகாமை,
கோக்குவில். தொ.பேசி: 021 222 5908
Hot Line:- 0777 710785
Email:- satstech.india@yahoo.co.in

---

## சேவை நலன் பாராட்டு விழா



யா/தம்பசிட்டி
மெ.மி.த.க.பாடசாலை,
பருத்தித்துறை

**வீரகத்திப்பிள்ளை வடிவேல்**
அதிபர் S.L.P.S. 2-I

**சேவை விவரம்**
ஆசிரிய சேவை
அனு/கெக்கிராவ பப்பிரிஸ்ற் மி.த.க. பாடசாலை (10.02.72-31.12.76)
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை (01.01.77 - 31.12.78)
யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. (01.01.79 - 31.05.94)
அதிபராக
யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் (01.06.94 -08.12.02)
யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை (09.12.02-18.04.08)

நாளை (19.04.2008) வெள்ளிக்கிழமை சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எமது அதிபர் அவரது ஓய்வுக் காலத்தில் சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை பருத்தித்துறை

---

## மணிவிழா வாழ்த்து



**கந்தையா சங்கரப்பிள்ளை நாகேஸ்வரி**
**தம்பதிகள் - 18.04.2008**

*தந்தையின் இலக்கணமாய் தாய்மையின் உறைவிடமாய்*
*சீர்மிகுந்த அதிபதியாய் அன்புடனே அறிவு தந்து*
*அவனியில் எமை வாழவைத்த அன்பின் தெய்வங்கள்*
*நூறாண்டு காலம் நோய் நொடியின்றி*
*சுகம் பல பெற்று சுந்தரமாய் வாழ*
*பத்திரகாளி அம்பாளின் பாதங்களை வழுத்துகின்றோம்.*

உளமார வாழ்த்தும்:
ருபன், யசோ, லம்பு, ஜெகன், சசி *(பிள்ளைகள்)*,
தனுஷியா *(மருமகள்)*,
கஜானன், கிருஷிகா *(பேரப்பிள்ளைகள்)*.
பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம்.

---

## கரவெட்டியில் கலாசார மண்டபம்

மந்திகை, ஏப். 18

'கமநெகும' திட்டத்தின் கீழ் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கலிகையில் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுப் பூர்த்தியடைந்துள்ளது.

இம் மண்டபம் இம் மாத இறுதியில் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-218)

## சங்கானைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

சங்கானை, ஏப்.18

சங்கானைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன. இதனால் பிரதேச மக்களும் பயணிகளும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

சங்கானை மீன்சந்தை, மரக்கறிச் சந்தை, பஸ்நிலையம் போன்ற பொது இடங்களிலும் பிரதான வீதிகளிலும் கட்டாக்காலி நாய்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

இவை வெறிபிடித்து காணப்படுவதுடன் வீதியால் செல்பவர்களைத் துரத்திக் கடிக்கின்றன என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202-29)

## நற்செய்தி ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப்.18

இலங்கை பெந்தகோஸ்தே சபையின் வருடாந்த மாநாடும் நற்செய்தி ஆராதனையும் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வரை இம்மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கண்டி வீதி, சுண்டுக் குழியில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது (202)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.18

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை புத்தகக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இக் கண்காட்சி எதிர்வரும் 22, 23ஆம் திக்திகளில் வதிரி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

## பூரணை விழா

யாழ்ப்பாணம், ஏப்.18

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியினர் நடத்தும் சித்திரைப் பூரணை விழா நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

---

### தவறிவிட்டது

விஜயகாந்தராஜா - கிறிஸ்ரன்பிரசாத் என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை [800863381V] சுன்னாகத்திற்கும் - ஏழாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் சசிகுமார் நகையகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73254)

### திருமணசேவை

73 ஆம் ஆண்டு, செவ்வாய் குற்றம், $35^{1/2}$ பாவம், 75ஆம் ஆண்டு செவ்வாய் குற்றம் 35 பாவம் 76ஆம் ஆண்டு செவ்வாய் குற்றம் $20^{3/4}$ பாவமுள்ள கனடா பிரஜாயுரிமையுள்ள மணமகன்களுக்கும், 73ஆம் ஆண்டு பாவம் 20 Management முடித்த, 75ஆம் ஆண்டு, செவ்வாய் குற்றமுள்ள 32 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமையுடைய மணமகன்களுக்கும் படித்த, அழகான மணப்பெண்கள் தேவை.

* எம்மிடம் டாக்டர்கள், எஞ்சினியர்கள் பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் ஜாதகங்களும் உண்டு.

**காலக்கண்ணன் திருமணசேவை**
*171/7 மனோன்மணி அம்பன்*
*வடக்கு வீதி, நல்லூர்.* (73193)

### COMPUTER CLASSES - R.Kumaran B.Sc.

ICT Grade 10/11 - Internet - Hardware - Ms office - Linux - PHP - Mysqul - V.B.Net - Asp.Net - Oracle - SQL server - VB6 - Java - HTML - BIT - CBF/DBF - DTP (Photoshop, Illustrator, CorelDrow, Indesign)
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. T.P. 0602216083

### தவறிவிட்டது

மாணிக்கவாசகர் நவரத்தினம் என்னும் பெயருடைய மோட்டார்சைக்கிள் ஆவணங்கள் அடங்கியபையொன்று (12.04.2008) சனிக்கிழமை யாழ்.நகர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மா.நவரத்தினம், ஐயநார் கோவிலடி, நாவற்குழி என்னும் முகவரியில் அல்லது 077 6542381 தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73200)

### SRI RANJANI BOOK SHOOP

அறிவொளி பரீட்சை நோக்கு இ.நிர்மலன் ஆசிரியரின் விஞ்ஞானப் புத்தகங்களையும் தபால் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் சகல மாவட்டங்களிலும் பெற்றுக் கொள்ள E.Nirmalan என்ற பெயருக்கு 200/- காசுக் கட்டளையை Kotahena - Colombo 13 தபாற் கந்தோரில் மாற்றத்தக்கதாக Start Publication 190 A, Jamptah Street, Colombo என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (73200)

190A, JAMPETAH STREET, COLOMBO 13
TEL: 011 4947856, 0777 413990

---

வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேபா




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பார்நாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி மென்மையுடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், வெளுப்படைதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*
**'சிவா நறுமணப் பூங்கா'**
*288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**றெஜினோல் றொசான் பாலச்சந்திரன்**

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 30.11.1979 | 18.04.2008 |

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*இல.33, இலந்தைக் குளம் வீதி,*
*கொழும்புத்துறை.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்

---

## ஓராண்டு நினைவஞ்சலி

| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 17 | 29 |
| 01 | 04 |
| 1982 | 2007 |



**அமரர் செல்வராஜா ரஜிவர்மன்**

திதி - திரயோதசி

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மோடு பழகிய எம் குடும்ப ஒளி விளக்கே
எம்மைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
எம் ஆயுள் உள்ள வரை
என்றும் உன் நினைவு எங்களுடன்...
உன் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர். குடும்பத்தினர்.

---

## கண்ணீர் மல்கிறோம்

எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை
செல்வி மீனா சண்முகானந்தன் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி விக்கினேஸ்வரி சண்முகானந்தன்**
அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம். (73252)

---

## மரண அறிவித்தல்

*சபாபதி பத்மநாதன்*

[சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்]

காரைநகர், முதலாம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வதிடமாகவும் தற்போது சிலாபத்தை வதிவிடமாவும் கொண்ட சபாபதி பத்மநாதன் அவர்கள் 16.04.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் நித்தியாணந்தன் (சவுதி அரேபியா), மனோரஞ்சிதம் (ஆசிரியர், சிலாபம்), சபாநாதன் (சுவிற்சர்லாந்து), சிவாணந்தன் (திட்டமிடல் பணிப்பாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றஞ்ஜனிதேவி (யாழ்ப்பாணம்), சிவகுமார் (வர்த்தகர், சிலாபம்), சந்திரவதனி (ஆசிரியை), உஷாநந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), அமுதசாரகன் ஆகயோரின் பாசமிகு பேரனும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.04.2008) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் சிலாபத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று சிலாபம் மாதம்பை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 032 222 2351 (சிலாபம்),
032 490 1462 (சிலாபம்),
077 6199140 (சிலாபம்).

*தகவல்:* திருமதி றஞ்சனி நித்தியானந்தன்
(மருமகள்)
30/3, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சுற்றுலா பஸ் ஆற்றில்!

# 41 மாணவர்கள் உட்பட 44 பேர் பலி!!

பரோடா,ஏப்.18

குஜராத் மாநிலத்தில் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ் நேற்றுமுன்தினம் அதிகாலை ஆற்றில் கவிழ்ந்தது. இந்தப் பயங்கர விபத்தில் 41 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 44 பேர் பலியாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

குஜராத் மாநிலம் பரோடா மாவட்டத்தில் உள்ள போடலி நகரில் சர்க்கரை ஆலை, பால் பண்ணை ஆகியவை உள்ளன. இங்கிருந்து 100 கி.மீ. தூரத்தில் சர்தார் சரோவர் அணைக்கட்டு உள்ளது. இந்த இடங்களுக்கு மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல டர்கோல் என்ற கிராமத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் முடிவு செய்தது.

5ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் 50 பேர், ஆசிரியர்கள் உட்பட 60இற்கும் அதிகமானவர்கள் அரசு போக்குவரத்துக்கழக பஸ்ஸில் பாடசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை புறப்பட்டனர். காலை 6.30 மணியளவில் போடலி அருகே ஆர்சங் ஆற்றின் கரையோரமாக பயங்கர வேகத்தில் சென்ற பஸ், ஒரு வளைவில் திரும்பியபோது கட்டுப்பாட்டை இழந்து எதிர்பாராதவிதமாக பாலத்தை உடைத்துக்கொண்டு ஆற்றுக்குள் பாய்ந்தது.

## குஜராத்தில் நேற்றுமுன்தினம் சம்பவம்



தண்ணீர் அதிகம் சென்றுகொண்டிருந்ததால், ஆற்றில் விழுந்து பஸ் தத்தளித்தது. தப்பிக்க வழியின்றி மாணவர்கள் கதறினர். சிறிது நேரத்தில், ஆற்றில் பஸ் மூழ்கத்தொடங்கியது. மாணவர்களின் மரண ஓலம் கேட்டு, அக்கம் பக்கத்தில் உள்ள கிராமங்களில் இருந்து மக்கள் ஓடிவந்தனர். சிலர் ஆற்றில் குதித்து மாணவர்களை மீட்க முயன்றனர். தண்ணீர் பயங்கர வேகத்தில் சென்றதால் அவர்களால் ஆற்றின் மையப் பகுதிக்கு செல்லமுடியவில்லை.

உடனே தீயணைப்புப் துறைக்கும் பொலிஸாருக்கும் மக்கள் தகவல் கொடுத்தனர். பொலிஸார் அங்கு வருவதற்கிடையில், ஆற்றில் பஸ் முழுமையாகவே மூழ்கி விட்டது. மீட்புப் பணிகளைத் தீவிரப்படுத்தும் வகையில் சர்தார் சரோவர் அணைக்கட்டு உடனடியாக மூடப்பட்டு தண்ணீர் வருவது நிறுத்தப்பட்டது.

இந்தப் பயங்கர விபத்தில் ஆசிரியர்கள், பஸ் சாரதி என இதுவரை 44 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் சில மாணவர்களை காணவில்லை என்றும் அவர்களது உடல்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்துவருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் 4 மாணவர்கள் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்விச் சுற்றுலா சென்ற மாணவர்கள் ஆற்றில் விழுந்து பலியான சம்பவத்தால் குஜராத் மாநிலமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

## விண்வெளிக்கு மனிதனை அனுப்ப இந்தியா முயற்சி

விண்வெளிக்கு மனிதனை அனுப்ப இந்தியா தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என பிரதமர் அலுவல் விவகாரத்துறை அமைச்சர் பிருதிவிராஜ் சவாண் தெரிவித்தார்.

விண்வெளிக்கு மனிதனை அனுப்புவது குறித்தும் இந்திய விஞ்ஞானிகள் தீவிர ஆய்வை மேற்கொண்டுள்ளனர். அதற்கான சாத்தியக் கூறுகளும் ஆராயப்பட்டு வருகின்றன.

சந்திரனின் வட்டப்பாதையில் வலம்வரவுள்ள சந்திராயன் செயற் கைக்கோள், இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி, அதன் தெளிவான புகைப் படத்தையும், முப்பரிமாண வரைபடத்தையும் பூமிக்கு அனுப்பும்.

# நளினியைப் பிரியங்கா சந்தித்ததில் தவறில்லை என்கிறார் மதுரை ஆதீனம்

சென்னை, ஏப்.18

ராஜீவ் படுகொலையில் தண்டனை பெற்ற நளினியை ராஜீவின் மகள் பிரியங்கா சந்தித்ததில் எந்தவிதத் தவறும் இல்லை.

- இவ்வாறு மதுரை ஆதீனம் கூறியுள்ளார்.

வேலூரில் கடந்த புதன் கிழமை நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்குபெற்ற வந்தபோதே ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஊடகவியலாளர்களிடம் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

வேலூர் சிறையில் இருக்கும் நளினியை ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா சந்தித்ததில் தவறில்லை. இதில் இருவருக்குமே மன நிறைவு ஏற்பட்டுள்ளது.

தந்தையை இழந்த பிரியங்கா அங்கு கண்ணீர் விட்டுக் கதறி அழுதுள்ளார். ஆத்திரத்தால் தவறு செய்துவிட்டேன் என நளினி உணர்ந்துள்ளார் - என்றார்.

ராஜீவின் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை நிறைவேறுமா என்று ஊடகவியலாளர்கள் கேட்டபோது -

தூக்குத் தண்டனை நிறைவேறாமல் போனாலும் போகலாம் - என்றார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பல்வேறு நாடுகளில் பேசியுள்ளேன். அவர்களுக்கு நல் வாழ்வு கிடைக்கவேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசும், இந்திய அரசும், விடுதலைப் புலிகளும் ஒன்றாக அமர்ந்து பேசி நியாயமான ஒரு தீர்வைக் காண வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு இரும்புக்குழாய் கடத்தல்; ஆறு மீனவர்கள் 'கியூ'ப் பிரிவினரால் கைது

சென்னை, ஏப்.18

இலங்கைக்கு 53 இரும்புக் குழாய்களை கடத்திச்செல்ல முயன்றனர் எனக் கூறப்படும் உள்ளூர் மீனவர்கள் உட்பட 6 பேரை இந்திய கியூப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம் மீமிகல் என்ற இடத்திலிருந்து இலங்கைக்கு பொருட்கள் கடத்தப்படுகின்றன என பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து அந்தப் பகுதியில் கியூ பிரிவு பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது 53 இரும்புக் குழாய்களை இலங்கைக்கு கடத்திச் செல்லமுயன்ற ஒரு கும்பலை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர் என்றும் அவர்களிடம் இருந்து அவற்றை பறிமுதல் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

உள்ளூர் மீனவரான ரகு, முத்து ராமலிங்கம், மணி, குஞ்சன், சிவசாமி, முத்து ஆகிய ஆறு பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். மேலும் முக்கிய குற்றவாளிகள் எனக் கருதப்படும் வீரமணி மற்றும் சுரேந்திரன் ஆகிய இருவரையும் பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர்.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருட்களைக் கடத்திச் செல்லும் முகவர்களாகச் செயற்படுகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உத்தரப் பிரதேச இடைத்தேர்தலில் மாயாவதியின் ப.ச. கட்சி வெற்றி

உத்தரப் பிரதேசத்தில் 3 பேரவைத் தொகுதிகளுக்கும், 2 மக்களவைத் தொகுதிகளுக்கும் நடந்து முடிந்த இடைத் தேர்தலில் முதல்வர் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் அசம்கர், கலீலாபாத் மக்களவைத் தொகுதிகளுக்கும், கலோநீல்கஞ்ச், பில்கிராம், மோரத்நகர் ஆகிய பேரவைத் தொகுதிகளுக்கும் ஏப்ரல் 12ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் பணிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கலீலாபாத் தொகுதியில் பகுஜன் சமாஜக் கட்சி குஷல் திவாரி, சமாஜவாதி வேட்பாளர் பஹல்சந்திரயாதவை விட 64 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

அசம்கர் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் அக்பர் அகமது தும்பி, பா.ஜ.க.வேட்பாளர் ராம்கந்த்யாதவை விட 53 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

கலோநீல்கஞ்ச் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் பிரிஜ்சிங், சமாஜவாதி வேட்பாளர் யோகேஷ் பிரதாப் சிங்கை விட 9 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

மோரத்நகர் தொகுதியில் பி.எஸ்.பி. வேட்பாளர் ராஜ்பால் தியாகி, ராஷ்டிரிய லோக் தள் வேட்பாளரைவிட கூடுதல் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இதேவேளை, ஒரிசா மற்றும் மேற்கு வங்க இடைத் தேர்தலில் காங்கிரஸ் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

ஒரிசா லஷ்மிபூர் தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் காங்கிரஸில் பூர்ணசந்திரா வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட பிஜு ஜனதா தள வேட்பாளர் பிபிஷந் மஜிஹியை விட 484 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

# அதிராம்பட்டினம் அருகே அதிசயச் சிறுமி தினமும் ஒருமணி நேரம் நிறம் மாறுகிறார்

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அருகே உள்ள நடுவிக்காடு கிராமத்தில் தினமும் ஒரு மணி நேரம் நாக்கு மற்றும் கை, கால்கள் குங்கும நிறமாக மாறும் அதிசயச் சிறுமியால் அந்தக் கிராமமே பரபரப்பில் மூழ்கியுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு-

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அருகே உள்ளது நடுவிக்காடு கிராமம். இங்கு வசிப்பவர் பாலசுப்பிரமணியன். இவர் ஒரு விவசாயி. இவரது மகள் ஐஸ்வர்யா (வயது - 10), பட்டுக்கோட்டை சாரதா வித்தியாலய மெட்ரிக் பள்ளியில் 5ஆம் வகுப்புப் படித்துவருகிறாள்.

கடந்த முதலாம் திகதி திடீரென ஐஸ்வர்யாவின் உதடு, நாக்கு, உள்ளங்கை, கால் பாதத்தின் மேல் பாகங்கள் குங்குமச் சிவப்பாக மாறின. இதைப் பார்த்த அவரது பெற்றோர், எறும்பு அல்லது வண்டு கடித்திருக்கும் என நினைத்து விட்டு விட்டனர். ஒரு மணி நேரத்தில் சிறுமி பழைய நிலைக்குத் திரும்பிவிட்டாள்.

ஆனால், மறுநாள் முதல் தினமும் காலையில் சுமார் ஒருமணிநேரம் சிறுமியிடம் இந்த மாற்றத்தைக் காண முடிந்தது. காலை 6.30 மணிக்கு ஐஸ்வர்யாவின் உடல் பாகங்கள், திடீரென குங்கும நிறமாக மாறிவிடுகிறது. 7.30 மணி வரை இதே நிலை நீடிக்கிறது. பிறகு அந்த நிறம் மறைந்துவிடுகிறது. ஏதாவது ஒருநாள் காலையில் இந்த மாற்றம் ஏற்படவில்லையென்றால் அன்று மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை ஏற்படுகிறது.

இவ்வாறு நிறம் மாறும்போது அவளது உடலில் இருந்து குங்கும வாசனை வீசுகிறது. அவளை யாராவது தொட்டால் அவர்களின் கையிலும் குங்கும நிறம் ஒட்டுகிறது. சிறுமி நிறம் மாறுவதற்கு முன் சிறிது நேரம் உடல் முழுவதும் ஒரே எரிச்சலாக இருக்குமாம்.

# சீனாவில் திபெத்தியர் வாழும் பகுதியில் பௌத்த பீடங்களில் ஆயுதங்கள் மீட்பு

## திடீர் தேடுதல் வேட்டையில் கண்டுபிடிப்பு

திபெத்தியர்கள் செறிந்து வாழும் சீனாவின் கன்ஷூ மாகாணத்தில் உள்ள 11 பௌத்த பீடங்களில், பெருமளவான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கண்டுபிடிக்கபட்பட்டுள்ளனவென சீன உத்தியோபூர்வ செய்தி நிறுவனமான 'சிங்குவா' தெரிவித்துள்ளது.

கன்ஷூ மாகாணத்திலுள்ள கனான் பிராந்தியத்தில், இந்த பௌத்த பீடங்கள் அமைந்துள்ளன. கடந்த இரு நாள்களாக இவற்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் வேட்டையின் போது, இவை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன என்றும் சிங்குவா விவரித்துள்ளது.

திபெத்திய தலைநகரான லாசாவில் கடந்த மே மாத மத்தியில், சீனாவுக்கு எதிராக குமுறி வெடித்த கிளர்ச்சிகள் அதன் இதர பகுதிகளுக்கும் பரவின. அச் சமயத்தில், சீனாவின் கனான் பிராந்திய திபெத்தியர்களும் கலவரங்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

கனானில் கலவரங்களில் ஈடுபட்ட திபெத்திய குண்டர்களால், சீனருக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பலர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த அசம்பாவிதங்களில் 94 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மேற்படி செய்தி நிறுவனம் விளக்கியுள்ளது.

கனானில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக, அரசின் பணிப்புரைக்கிணங்க, 2ஆயிரத்து 200ற்கும் மேற்பட்டோர் பொலிஸில் சரணடைந்தனர். இவர்களில் பொரும்பாலானோர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஏறத்தாழ 100 பௌத்த பிக்குகள் வரை, தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அச்செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கனான் பிராந்தியத்திலுள்ள ஜொனி, எக்ஸஹி, ஹஏசுவோ நகரம் ஆகிய இடங்களிலுள்ள 11 கேந்திர பௌத்த பீடங்களிலேயே கடந்த இரு நாள்களாக அதிரடி தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இந்த தேடுதல் வேட்டையின் போது 3 ரைபிள்கள் , 571 ரவைகள், 10 கிலோ டைனமைட், 5 தன்னியக்கக் கருவிகள் உட்பட பெருந்தொகையான சட்டவிரோத பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் சிங்குவா மேலும் விவரித்துள்ளது.

# நம்பிக்கையை கட்டியெழுப்பும் பொறுப்பு அமெ. கிறிஸ்தவ ஆலயங்களுக்குரியனவே

## தேவாலயங்களுக்கு பாப்பரசர் அறிவுரை



கிறிஸ்தவ நம்பிக்கையை அதனுடனான தொடர்பையும் பேண வேண்டிய பொறுப்பு கிறிஸ்தவ தேவாலயங்களுக்குரியதாகும். இதைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்குமான பொறுப்பை அமெரிக்க கிறிஸ்தவ தேவாலயங்களால் தட்டிக் கழித்துவிட முடியாது.

இவ்வாறு, அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ள பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் புதன்கிழமை வாஷிங்டனில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 9 அமெரிக்க கர்தினால்கள், 350 ஆயர்கள் ஆகியோர் பங்குபற்றியுள்ளனர். பாப்பரசர் தொடர்ந்து பேசுகையில், அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் மக்களின் வாழ்க்கையில் பெரும்பகுதியில் இந்த நம்பிக்கை இழையோடுவதனைக் காணலாம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க கலாசாரத்தில் ஊடுருவியுள்ள தனிப்பட்ட வலுவான மாறுபட்ட அம்சத்தால் பல கத்தோலிக்கர்கள் வழி நடத்தப்படுகிறார்கள். தேவாலய கோட்பாடுகள் உள்ளன. இவற்றில் முழுமையாக இவர்கள் கவனம் செலுத்துவதில்லை என்றும் அவர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இக்கோட்பாடுகளை பொறுத்தமட்டில் தெரிவு செய்வோம் அவற்றைக் கடைப்பிடிப்போம் என்றபோக்கை இவர்கள் கடைப் பிடிக்கிறார்கள். இவற்றின் வயிலாக மற்றவர்களை உதாசீனம் செய்து விடுகிறார்கள் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பல முனைகளில் படையினர்-புலிகள் மோதல்

கொழும்பு,ஏப். 18

மணலாறு, மண்கிண்டியில் நேற்று முன்தினம் மலைப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலில் படையினர் ஐவர் உயிரிழந்தனர் என்றும் 10 பேர்வரை படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலின்போது படையினர் விட்டுச் சென்ற பெரும்தொகையான வெடிபொருள்களைத் தாங்கள் மீட்டுள்ளனர் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை மணலாறு, ஜானகபுர, கிரிபென் வேவ, ஆண்டான் குளம் பகுதிகளில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் ஐவர் உயிரிழந்தனர் என்றும் குறைந்தது 47 பேர் வரை படுகாயமடைந்திருக்கலாம் என்றும் தமது தரப்பில் 9 பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கல்லியடைஞ்சான் மற்றும் மாந்தோட்டம் பகுதிகளிலும் நேற்று முன்தினம் மோதல்கள் இடம்பெற்றன. இந்த மோதல்களில் விடுதலைப் புலிகளில் நால்வர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம், முகமாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் குறைந்தது ஆறு பேர் வரை படுகாயமடைந்திருக்கலாம் என்றும் தமது தரப்பில் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இது ஒரு காட்டுப்பகுதி என்றும் அங்கு விடுதலைப் புலிகளின் விசேட படை யணிகளுக்கு விநியோகங்களை வழங்கும் தளம் இருப்பதாகவும் அதன்மீதே நேற்றுத், தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் அச்சமயமே சிறுமி கொல்லப்பட்டிருக்கிறார் என்றும் அவர் விடுதலைப் புலிகளின் சிறுவர் படையணியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தொடர்ந்தும் பயங்கரவாத நட வடிக்கைகளை முன்னெ டுத்துச் செல்கின்றனர். ஒஸ்லோவில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் புலிகளின் குரலாக ஒலிக்கும் வைகோ, புலிகளின் தற்போதைய நிலைப்பாடு பற்றிக் கூறியிருக்கின்றார். வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டமை தவறான நிகழ்வு என்று கூறியிருக்கும் வைகோ அவர்கள் மீண்டும் குடிய மர்த்தப்படுவார்கள் என்று சொல்லவில்லை.

ஆகவே அந்த முஸ்லிம்கள் மீண்டும் குடியமர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றே வைகோ கூறுகிறார். இவர் புலி களின் சர்வதேச பேச்சாளராகச் செயற்படு கிறார்.

**மடுமாதா சொரூபத்தை புலிகளின் பகுதிக்கு அகற்றியது அரசை சிக்கலில் மாட்டும் செயல்**

இது இவ்வாறிருக்க மடுமாதாவின் திருவுருவச் சிலை மடு தேவாலயத்தில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுசெல்லப் பட்டுள்ளது. இது மிக ஆபத்தான ஒன்று.

1999 இல் மடுப் பகுதியில் படை நட வடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதிலும் அத்திருவுருவச் சிலைக்கு ஆபத்து ஏற்படவில்லை. அத்திருவுருவச்சிலை அகற் றப்படவுமில்லை.

நாம் மடுப்பகுதியைப் புனிதமான பகுதியாக மதித்துச் செயற்படுகிறோம். அங்கு நாம் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை.

இவ்வாறான நிலையில் திருவுருவச் சிலை புலிகளின் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டமையானது அரசை சிக்க லில் மாட்டும் செயலாகும்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. அவர்கள் பயங்கரவாதத்தைக் கைவிட்டுவிட்டு பேச்சுக்குத் திரும்ப விரும்பினால் அதற்கு நாமும் தயார். அதற்கான கதவு இன்னும் திறந்தே உள்ளது. - என்றார். (அ-1)

## உசனில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

விடுதலைப் புலிகள் ஏவிய ஐந்து ஷெல்கள் உசனில் வீழ்ந்து வெடித்தன என்றும் இதில் சிவிலியன் ஒருவர் காயமடைந்தார் என்றும் சில வீடுகள் சேதமடைந்தன என்றும் பலாலிப் படைத் தலைமையகம் நேற்றிரவு தெரிவித்தது. (அ-1-203-78)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் இடம்பெற்று வரும் மோதல்களில் ஈடுபடுவதற்காக அரசின் முக்கிய படையணிகள் வடக்கு போர்முனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் திறன் உள்ளவர்களா என்ற சந்தேகத்தை கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பி உள்ளது. (அ-1)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லப்பட்டார்.

கலட்டி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்துரை சிவநேசன் (வயது 34) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் குருநகர் சின்னக்கடைப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருநகர், பாங்சல் வீதியும் சின்னக்கடை கிழக்கு வீதியும் சந்திக்கும் இடத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த இவரை வழிமறித்த ஆயுததாரிகள் சுட்டுவிட்டுச் சென்றனர்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் அங்கு மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த ரூபன் என அழைக்கப்படும் யோ.வசந்தரூபன் (வயது 24) என்பவரே மரணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இரு மரணங்கள் தொடர்பாக யாழ். மேலதிக நீதிவான் எஸ்.வசந்தசேனன் சம்பவ இடங்களில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-203-78)

## வன்னிப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரதேசத்தில் உள்ள வைத்தய சாலைகளில் நாளாந்த, சாதா ரண செயற்பாடுகளை மேற்கொள்வதற்கே பெரும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. இந் நிலையில் மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சையளிப்பதில் பிரதேச வைத்திய சாலைகளில் பெரும் பிரச்சினைகள் காணப்படுகிறன.

இலங்கைச் சுகாதார அமைச்சுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை யின்படி செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வடக்கு, கிழக்கில் பல மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் விநியோகங்களையும் வழங்கி வருகின்றது. மேலும் முருங்கன் மருத்துவமனைக்கு முறிந்த அவயவங்களை சரிசெய்வதற்கான உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

**குடாநாட்டில் சுகாதார வசதிகள் பெறமுடியாத நிலை**

யாழ். குடாநாட்டு மக்கள் அங்கு சில வகை சுகாதார வசதிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

எனினும் அவர்களுக்கு அவசியமான சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நோயாளிகளை வாரம் இரு தடவைகள் விமானம் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கொழும்புக்கு அழைத்து வருகின்றது.

மார்ச் மாதத்தில் விசேட சத்திர சிகிச் சைகள், பரிசோதனைகள் அவசியமாகக் காணப்பட்ட 54 நோயாளிகள் செஞ்சிலு வைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேலும் அவசியமான மருத்துவ உபகர ணங்களும் விமானம் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

செஞ்சிலுவைக் குழுவின் விமான சேவைகள் நோயாளிகளுக்கு - குறிப்பாகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு - பேருதவியாக இருப்பதாக யாழ். போதனா வைத்திய சாலை மருத்து வர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வேறு பகுதி களுக்கு மருத்துவ பயிற்சிக்காகச் செல்லும் மருத்துவர்களும் இந்த விமான சேவையைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## யாழ்.ஆஸ்பத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது காலாண்டுக்குரிய (ஏப்ரல், மே, யூன்) மருந்து பொருள்கள் இதுவரை வந்துசேராமையே இந்த மருந்துத் தட்டுப் பாட்டுக்குக் காரணம் என்று தெரி விக்கப்பட்டது.

பனடோல்"முதற்கொண்டு முக்கிய மான பல மருந்து வகைகள் அனைத்துக் கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இரண்டாவது காலாண்டுக்குரிய மருந் துப் பொருள்கள் இங்கு வந்து சேருவதற்கு குறைந்தது மூன்று வாரங்களாவது பிடிக்கும் எனவும் அதற்குள் இங்கு கையிருப்பில் உள்ள மருந்து வகைகள் முடிவடைந்து விடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட் டது.

மருந்துப் பொருள்களை அனுப்பி வைக் கும் அரச மருந்துக் களஞ்சியத்தில் பணிபுரிவோர் புதுவருட விடுமுறையில் உள்ளமையால் அந்தப் பணி மேலும் தாமதமடையலாம் என்றும் தெரி விக்கப்படுகின்றது.

முதலாவது காலாண்டுக்குரிய மருந்து களே இதுவரை முற்றாக அனுப்பி வைக்கப் படாத நிலையில் இரண்டாவது காலாண்டுக்குரிய மருந்துகளும் வந்துசேராமை யால் மருந்துத் தட்டுப்பாட்டைத் தாக்குப் பிடிப்பது சற்றுக் கடினமாக இருக்கும் என வைத்திய சாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். யாழ்.குடாநாட்டின் வைத்திய வசதிகளைப் பூர்த்தி செய்யும் பிரதான இடமாக யாழ்.போதனா வைத்தியசாலை விளங்குகின்றது. தினமும் குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து தமது வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். (அ-50)


### தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

⇨Radio, T.V. And Video Deck Repairing

சகல இன றேடியோக்கள், ரெலிவிசன்கள், வீடியோ டெக் U.P.S., Monitor, CD Player, Amplifier கள் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். *காலம்: 9 மாதம்*

⇨ஏயர் கொன்டிசனிங்

சகல இன குளிர்சாதனப் பெட்டிகள், எயர் கொண்டிசன்கள் பயிற்சியளிக்கப்படும். *காலம்: 06 மாதம்*

⇨ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங்

வீட்டு மின் வேலைகள், ரான்ஸ்போமர், மோட்டார், fan வைண்டிங் செய்யப்படும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.

*பயிற்சிகள் ஆரம்பம்: 19.04.08 (சனி, ஞாயிறு வகுப்பு)*

*விவரங்களிற்கு: 21.04.08 (கிழமை நாள்கள்)*

**Jaffna Techinal Institute**

*இல 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்., T.P. 222 6434*

### தொடர் பரீட்சையும் கருத்தரங்கும்

*பொருளியல்: N.B.கஜீதரன்* A/L 2008 *கணக்கீடு P.பகீரதன்*

*மாணவர் கவனத்திற்கு:* ⇨பரீட்சைகள் அனைத்தும் மாதிரிப் பரீட்சைகளாகவே நடைபெறும். ⇨ வெளிமாணவர்கள் தமது பதிவுகளை விக்னா, நாவலர் கல்வி நிலையங்களில் முன்கூட்டியே மேற்கொள்ளுதல் வேண்டும். ⇨பரீட்சைகளில் ஏனைய மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் பரீட்சை வினாக்களும் ஆசிரியர்களினால் பரிசீலிக்கப்பட்டு உள்ள க்கப்படும். ⇨பரீட்சைகள் அனைத்தும் விக்னா மற்றும் நாவலர் கல்வி நிறுவனங்களில் மட்டும் நடைபெறும். ⇨பரீட்சைக்கான விடையளிக்கும் தாள்கள் பரீட்சைப் பிரிவினரால் புத்தக வடிவில் வழங்கப்படும். ⇨ஒவ்வொரு பரீட்சைக்குமான கருத்தரங்குகள் ஆசிரியர்களினால் உடனுக்குடன் நடத்தப்படும்.

⇨கடந்த வருடம் ஆசிரியர்களினால் நடத்தப்பட்ட தொடர் பரீட்சை மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றி மாணவர்களி முன்னணிப் பெறுபேறு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

*பரீட்சைக் கட்டணம்: அனைத்துப் பரீட்சைகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபா 400 ஆகும். இரண்டு பரீட்சையிலும் தோற்றும் மாணவர்களுக்கு மொத்தக் கட்டணத்தில் 10% சலுகை வழங்கப்படும். அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முடிவுத் திகதி ஏப்ரல் 30*

**பொருளியல்**

| இல | நாள் | பாடம் | நேரம் |
|---|---|---|---|
| 01 | மே 05 | Eco-I | 8.00-11.00 |
| 02 | மே 19 | Eco-II | 8.00-11.00 |
| 03 | ஜூன் 05 | Eco-I | 8.00-11.00 |
| 04 | ஜூன் 20 | Eco-II | 8.00-11.00 |
| 05 | ஜூலை 01 | Eco-I | 8.00-11.00 |
| 06 | ஜூலை 16 | Eco-II | 8.00-11.00 |

**கணக்கீடு**

| இல | நாள் | பாடம் | நேரம் |
|---|---|---|---|
| 01 | மே 01 | Acc-I | 8.00-11.00 |
| 02 | மே 20 | Acc-II | 8.00-11.00 |
| 03 | ஜூன் 03 | Acc-I | 8.00-11.00 |
| 04 | ஜூன் 18 | Acc-II | 8.00-11.00 |
| 05 | ஜூலை 02 | Acc-I | 8.00-11.00 |
| 06 | ஜூன் 17 | Acc-II | 8.00-11.00 |

**Personal Class**
364, Stanly Road (Near DMI)

**B.A. I, B.A. Final**
*மீட்டல் வினா விடை வகுப்பு*
தமிழ் : K.தர்மராஜா
Hindu cul : சிறீ
Drama : கனகேஸ்
Eco : சசி

English GAQ/B.A.-Part I
R.Maheswaran (Dip in Eng.)
9-10, 11-12
காலை ஆரம்பம்

**நியூட்டன் அக்கடமி**
கோண்டாவில்
O/L Day Class
Super Grade
ஆசிரியர் குழுவினால கற்பிக்கப்படும்.
இன்று ஆரம்பம்: 18.04.08 fri 9.00 am
(இம்மாதக் கட்டணம் இலவசம்)
அனுமதிக்கு முந்துங்கள்.
100% சித்திக்கு உத்தரவாதம்
கடந்த காலம் பெறுபேறுகள் எமது கற்பித்தல் திறமைக்கு சான்றாகும்.

**IIS Computer courseS**
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I-14-04-2008, பிரிவு II-20-04-2008 - பகல் 10.00மணி
INSTITUTE OF INFORMATIC STUDIES
#100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P. 021 222 2831


## மரண அறிவித்தல்

### குணசீலன் சறோஜா

நல்லூர், சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசீலன் சறோஜா நேற்று (17.04.2008) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பென்னுத்துரை (C.T.B) - அன்னலட்சுமியின் அன்பு மகளும் குணசீலனின் அன்பு மனைவியும் சஜீவனின் அன்புத்தாயாரும் சோதிமலர், பேபி சரோஜா, காலஞ்சென்ற கமலா தேவி, ஸ்ரீஸ்கந்தராசா, தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குணரட்ணம் - ராஜேஸ்வரியின் அன்பு மருமகளும் பற்குணராசா, ஞானசேகரம், நவரட்ணம், ஜெயராசா, செல்வராசா, சோமசுந்தரம், குருநாதன், நவீனா, ராகினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.04.2008) வெள்ளிக் கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*288, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

தகவல்: கு.குணசீலன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org